KULAM

# கோகுலம்

பிப்ரவரி 2005

ரூ.6/-



புதிய

பகுதிகள்

ஆரம்பம்!


ஹா... ஹா... ஹா...

அம்ருதா!

# வண்ணம் உங்கள் கை வண்ணம்



மறுபாதியைப் பூர்த்தி செய்யுங்கள்,
ஊர்தியை ஓட்டிச் செல்லுங்கள்!



# கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் ஆசிரியர் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிடுபவர் :
**கி.ராஜேந்திரன்**

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32

*முதன்மை உதவி ஆசிரியர் :*
**எஸ். சுஜாதா**

*வடிவமைப்பு :*
**எஸ். ஸ்டீஃபன்**
**பி.ஆர். ராஜன்**

*தொலைபேசி :*
22345622 / 23 / 24
*தொலைநகல் :*
044 - 22345621

*மின்னஞ்சல் :*

ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
*உள்நாடு :*
**ஒரு வருடம் : ரூ.72/-**
*வெளிநாடு*
*(விமானத்தபால்) :*
*ஒரு வருடம் :* **24 யுஎஸ். டாலர்**
**இலங்கை : ரூ.400/-**

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

**குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்**










பிப்ரவரி 2005 மலர் : 23 இதழ் : 1

# கோகுலம்


உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்

# பெயர் என்ன?




# யார் அந்தப் பிரபலம்?



ஒரு குறிப்பிட்ட சாதனை யாளரைப் பற்றிய எட்டு குறிப்புகளின் அணிவகுப்பு இந்த இதழில் இடம் பெற்றிருக்கிறது. முதல் குறிப்பைக் கொண்டே கண்டுபிடித்து விட்டால் 8 மதிப்பெண்கள். ஒவ்வொரு அதிகப்படி குறிப்புக்கும் ஒரு மதிப்பெண் குறைவு. (எடுத்துக்காட்டு 6ம் குறிப்பைப் படித்ததும் விடையைக் கண்டுபிடித் தால் 2 மதிப்பெண்கள் தான்). கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

- என். ஆனந்தி,
மூன்றாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சி

## நாகர்கோவில் பள்ளிகள் ஸ்பெஷல்

மார்ச் இதழ் நாகர்கோவில் பள்ளிகள் ஸ்பெஷலாக வெளிவர இருக்கிறது.

*பங்கேற்கும் பள்ளிகள்:*

1. ஏ.வி.டி. மேல்நிலைப் பள்ளி, கணபதிபுரம்
2. நாராயணகுரு மெட்ரிகுலேஷன் பள்ளி, நாகர்கோவில்

## அன்புள்ள உங்களுக்கு...

# எல்லாமே புதுசு!



இந்தக் கோகுலம் இதழைப் பார்த்தவுடன் உங்களுக்கு வியப்பு ஏற்பட்டிருக்கும். இந்த இதழ் கோகுலத்தின் பிறந்த நாள் இதழ். 23ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் கோகுலம் புதிய வடிவமைப்பில் வெளிவந்திருக்கிறது. வடிவம் மாறினாலும் 80 பக்கங்களிலிருந்து 96 பக்கங்களாக அதிகரித்து இருக்கிறது. வண்ணப் பக்கங்களும் அதிகம். புதிதாக சில பகுதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வடிவம் மாறினாலும் உங்கள் கோகுலம் என்றும் தரத்திலும் சுவையிலும் முதன்மையாக இருக்கும். இதழ் குறித்த உங்களது கருத்துகளை எழுதி அனுப்புங்கள்.

புத்தாண்டு மற்றும் கோகுலம் பிறந்த நாளுக்காக நிறைய வாசகர்கள் வாழ்த்து அட்டைகளை அனுப்பி வைத்துள்ளனர். அவர்களுக்கு கோகுலம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பிப்ரவரி 28 தேசிய அறிவியல் நாள். இந்த நாளில் அறிவியலை ஆக்கப்பூர்வமான விஷயங்களுக்குப் பயன்படுத்துவோம் என்று உறுதி மொழி எடுத்துக் கொள்வோம்.

வாழ்த்துகள்!



# வால் தேடி

ஈ ஒன்று கடவுளை நோக்கி கடுந்தவம் செய்தது. ஈயின் தவவலிமையை அறிந்த கடவுள் அதன் முன் தோன்றி, ''ஈயே உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்று கேட்டார்.





''பகவானே, வாலுள்ள விலங்குகளெல்லாம் எவ்வளவு அழகாக இருக்கின்றன! எனக்கும் அவற்றைப் போல் அழகான வால் வேண்டும்'' என்ற கோரிக்கையை வைத்தது.

கடவுள் எவ்வளவோ சொல்லியும், ஈ கேட்காமல் பிடிவாதமாய் தனக்கு வால் வேண்டும் என்று நச்சரித்தது.

கடவுள் ஒரு முடிவுக்கு வந்தவராய், ''சரி, நீ சென்று பறவைகள், விலங்குகள் ஆகியவை அழகுக்காகத்தான் வால் வைத்திருக்கின்றனவா எனக் கேட்டு வந்து என்னிடம் சொல். அவை 'ஆம்' என்று சொன்னால் உனக்கும் கண்டிப்பாக வால் தருகிறேன்...'' என்று சொல்லி மறைந்தார்.

ஈக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. தனக்கும் அழகான வால் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போடு, நேராக ஒரு நதிக்குச் சென்று, அகே நீந்திக் கொண்டிருந்த மீனைப் பார்த்து, ''மீன் அண்ணா, நீ அழகுக்காகத்தானே வால் வைத்திருக்கிறாய்? உன் வாலை எனக்குத் தாயேன்...'' என்று கெஞ்சிக் கேட்டது.

மீன் ஈயைப் பார்த்து சிரித்தபடி, ''நான் அழகுக்குத்தான் வால் வைத்திருக்கிறேன் என்று யார் சொன்னது? நான் நீந்தும்




# அலைந்த ஈ!

மா.அழகுராஜன்

போது அங்கும் இங்கும் திரும்பிச் செல்ல வேண்டும் என்றால் வாலின் உதவி வேண்டும். அதை எப்படி உனக்குத் தர முடியும்?'' என்று கூறி வாலை அசைத்துக் கொண்டே நீந்தி ஆழத்திற்குச் சென்றுவிட்டது.



அங்கிருந்து பறந்து வந்த ஈ ஒரு மரத்தில்



இருந்த மரங்கொத்தியிடம், ''மரங்கொத்தி அண்ணா, அழகுக்காகத்தானே வால் வைத்திருக்கிறாய், அதை எனக்குக் கொடுக்க மாட்டாயா?'' என்று ஏக்கமாய்க் கேட்டது.

''என்ன... முட்டாள்தனமாய் என் வாலைக் கேட்கிறாய்? நான் என்னுடைய வாலை மரத்தில் அழுத்திக் கொண்டால்தான், என் உடலை வளைத்து அலகினால் மரத்தைக் கொத்தி உள்ளிருக்கும் பூச்சிகளைத் தின்ன முடியும்... போ... போ'' என்று கூறி வாலைத் தர மறுத்து விட்டது.


இதைக் கேட்ட ஈ வாலில்லாமல் மரங்கொத்தியால் வாழ முடியாது என்பதைத் தெரிந்து கொண்டு, தன் பயணத்தை மேலும் தொடர்ந்தது.

வழியில் ஒரு நரியைப் பார்த்தது. ''நரியண்ணா, உன் வாலை எனக்குத் தருகிறாயா?'' என்று ஆசையோடு கேட்டது.

''என்ன உளறுகிறாய்? வால் இல்லை என்றால் வேட்டை நாய்களிடம் இருந்து என்னால் தப்பிக்க முடியாது. வேட்டை நாய் என்னைப் பிடிக்க வந்தால் என் வாலை ஒரு புறமும் உடம்பை ஒரு புறமும் திருப்பிக்



## யார் அந்தப் பிரபலம்?



**1933ல் இந்தியக் குடியுரிமையைப் பெற்றவர்**

கொண்டே ஓடுவேன். நாய் என் வாலைப் பார்த்துக் கொண்டே பின்தொடர்ந்து ஓடிவரும்போது, சட்டென்று நான் வேறு திசையில் ஓடிச் சென்று தப்பித்துக் கொள்வேன். புரிந்து கொண்டாயா? வாலைத் தர முடியாது. தொந்தரவு செய்யாமல் இடத்தைக் காலி செய்.'' என்று சொல்லிச் சென்று விட்டது.

ஈ யோசித்தது. எல்லா விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் வால் அவசியமாகத்தான் இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டது. என்றாலும் தனக்கு எப்படியும் வால் வேண்டும் என்ற பேராசையில் மீண்டும் கடவுளை நினைத்து தவம் செய்தது.

ஈயின் முன்னால் கடவுள் தோன்றினார். ''எல்லா விலங்கு, பறவைகளுக்கும் வால் தேவையாக இருக்கிறதே தவிர அழகுக்காக அல்ல என்பதைப் புரிந்து கொண்டாயா?'' என்று கேட்டார் கடவுள்.

''கடவுளே, நீ என்னை வாலைத் தேடி வா என்று அனுப்பி விலங்குகளும் பறவைகளும் என்னைக் கேலி செய்யும்படி பண்ணிவிட்டாய். இதையெல்லாம் என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நீ எனக்கு வால் கொடுத்தே ஆக வேண்டும். இல்லையென்றால், உன்னை நிம்மதியாய் இருக்க விடமாட்டேன். அடிக்கடி உன்னைக் கூப்பிட்டுத் தொந்தரவு செய்து கொண்டே இருப்பேன்.'' என்று ஈ கோபமாகச் சொன்னது.

கடவுள் எவ்வளவோ புத்திமதி சொல்லியும் ஈ தனக்கு வால் வேண்டும் என்று பிடிவாதமாக இருந்ததால் ''ஈயே, கடைசியாக அதோ நிற்கிறதே அந்தப் பசுவிடம் சென்று, அதன் வாலைத் தரும்படி கேட்டுப்பார். அதுவும் கொடுக்க மறுத்தால், நான் உனக்கு கண்டிப்பாக வால் கொடுத்து உதவுகிறேன்'' என்று சொன்னார்.

உடனே ஈ விர்ரென்று பறந்து சென்று பசுவின் மேல் அமர்ந்து கொண்டு, ''ஏ, பசுவே! உனக்கு வால் எதற்கு? எனக்குக் கொடுத்து விடு'' என்று அதிகாரமாய்க் கேட்டது.

பசு திரும்பி ஈயைப் பார்த்து விட்டு பதில் ஒன்றும் சொல்லாமல் தன் வாலைச் சுழற்றி ஈயின் மேல் ஓர் அடி அடித்தது. ஈ பொத்தென்று கீழே விழுந்து வலி தாங்காமல் அழுதது. அதன்பிறகு வால் பற்றி யோசிப்பதை அது நிறுத்திக் கொண்டது.




# மோசமான பேரழிவு

உலகில் இதுவரை ஏற்படாத மோசமான சுனாமி ஆசிய நாடுகளை மிகவும் கொடூரமாகத் தாக்கி விட்டது. 2004 டிசம்பர் 26ந் தேதி இந்தோனேஷியாவில் சுமத்ரா தீவு அருகே 9 ரிக்டர் அளவில் நில நடுக்கம் ஏற்பட்டது. அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளிலும் தொடர்ச்சியாக நில நடுக்கங்கள் ஏற்பட்டு இந்தியப் பெருங்கடலில் சுனாமி என்ற ராட்சத அலைகளை ஏற்படுத்தின. இதன் விளைவாக தமிழகத்தில் சென்னை, நாகை, கடலூர், குமரி மாவட்ட கடற்கரை கிராமங்களில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன. ஆந்திரா, கேரளாவிலும் பாதிப்பு இருந்தது. இலங்கை, அந்தமான் - நிகோபார் தீவுகள் கடுமையான பாதிப்புக்குள்ளாகி விட்டன. ஒட்டுமொத்தமாக லட்சத்திற்கும் மேற்பட்டோர் இந்த சுனாமியில் பலியாகி விட்டனர்.

திருப்பதி பெருமாள் கோயில் உண்டியல் மூலம் 2004ஆம் ஆண்டு 220 கோடி ரூபாய் வருவாய் வந்துள்ளது. கடந்த 20 ஆண்டுகளில் 2004ஆம் ஆண்டு வருமானம் தான் அதிகம். 765 கிலோ தங்க நகைகளை பக்தர்கள் அளித்துள்ளனர். 2003ஆம் ஆண்டு உண்டியல் வருவாய் 180 கோடியாக இருந்தது.

1950 முதல் வெளிவந்த ஸ்பைடர் மேன், கேப்டன் அமெரிக்கா, டேர்டெவில் போன்ற கதாபாத்திரங்கள் தோன்றும் 3 லட்சம் காமிக்ஸ் புத்தகங்களை அமெரிக்காவின் மார்வெல் எண்டர் பிரைசஸ் நிறுவனம் ஃபிரான்ஸ் அருங்காட்சியகத்துக்குப் பரிசாக வழங்கியுள்ளது.

அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஃபிரான்ஸ் நாடுகளில் இந்தியர்கள் நடத்தும் உணவகங்களுக்கு ஏக கிராக்கியுள்ளது. இங்கிலாந்தில் மட்டும் 7,500 இந்திய உணவகங்கள் உள்ளன.





# சுவையான கேக்!




**கேக்** எவ்வளவு சுவையான தின்பண்டம்! கேக்கைப் பார்த்த உடனே சாப்பிடத் தூண்டக் கூடிய சக்தி கேக்குக்கு இருக்கிறது. இந்த கேக் எவ்வாறு செய்யப்படுகிறது என்பதை அறிந்து கொள்ள ஆர்வம் ஏற்பட்டது. உடனே ஈரோடு நகரைச் சேர்ந்த பத்து வாண்டுகள் மில்கா ஒன்டர் கேக் தொழிற்சாலையைக் காணப் புறப்பட்டனர். மில்காவிலிருந்து பெரிய வாகனம் ஒன்று வந்து குழந்தைகளை அழைத்துக் கொண்டு கிளம்பியது.



நகரிலிருந்து பதினைந்து நிமிடம் பயணம் செய்து சின்னசடையம்பாளையம் என்ற ஊருக்குள் நுழைந்தோம். கேக் மணம் வாண்டுகளைச் சுண்டி இழுக்க "ஃபேக்டரி இங்க தான் பக்கத்தில் இருக்கணும். வாசனை பிரமாதம்" என்று உற்சாகமாகக் குரல் கொடுத்தனர். அடுத்த நிமிடம் வண்டி தொழிற்சாலையின் வாசலில் நின்றது.

மில்கா ஒன்டர் கேக் நிர்வாக இயக்குனர் ராஜா குழந்தைகளை அன்புடன் வரவேற்று, தொழிற்சாலைக்குள் அழைத்துச் சென்றார்.



"கேக் செய்ய என்னெல்லாம் தேவை?" என்று கேட்டார்.

"மைதா, ஜீனி..."

"அவ்வளவுதானா?"

"முட்டை சேர்க்கணும்ல அங்கிள்?"

"ஆமாம். அத்துடன் வனஸ்பதி, வெஜிடபிள் ஃபேட் சேர்ப்போம்."

முதலில் ஸ்டோர் ரூமுக்குள் நுழைந்தோம். அங்கு மூட்டை மூட்டையாக மைதாவும் ஜீனியும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அருகில் வனஸ்பதி டின்கள் இருந்தன. அங்கிருக்கும் சிறிய மெஷின் மூலம் மைதா சுத்தமாகச் சலிக்கப்படுகிறது. அத்துடன் சிறிதளவு பேகிங்சோடாவும் சேர்த்து சலிக்கப்படுகிறது. கேக் மென்மையாவதற்கு இது அவசியம்.







பக்கத்து அறையில் முட்டைகள் உடைக்கப்பட்டு வடிகட்டப்படுகிறது.

அடுத்தது பிராசஸிங் அறைக்குள் நுழைந்தோம். அங்கு ஜீனி சுத்தமாக்கப்பட்டு முட்டையுடன் சேர்த்து ஓர் இயந்திரம் மூலம் நன்றாகக் கலக்கப்படுகிறது. இன்னொரு இயந்திரத்தில் வனஸ்பதியும் மைதாவும் கலக்கப்படுகிறது.

இரண்டு கலவைகளும் ஒன்றாக்கப்படுகின்றன. தரம் மிக்க ஃபுட் கலர்ஸ், நறுமணம் சேர்க்கப்பட்டு பெரிய பாத்திரங்களில் சேமிக்கப்படுகிறது. அலுமினியத்தால் கவர் செய்யப்பட்ட மர ட்ரேக்களின் உள்ளே தடித்த தாள் வைக்கப்பட்டு, அதில் இந்தக் கலவை ஊற்றப்படுகிறது.

இந்த ட்ரேக்கள் பெரிய உலைகளில் அடுக்கப்பட்டு,



190 டிகிரியில் வேக வைக்கப் படுகிறது. நூறு நிமிடங்களில் கேக் வெந்து மணம் வருகிறது.

பிறகு இந்த ட்ரேயிலிருந்து கேக் வெளியே எடுக்கப்பட்டு நான்கு மணி நேரம் ஆறவைக் கப்படுகிறது. பிறகு குளிர்சாதன அறையில் வைக்கப்படுகிறது. கேக்கிலிருக்கும் ஈரப்பதம் 20% க்கும் குறைவாக ஆக்கப்படுகிறது. பேக்கரியில் வாங்கப்படும் கேக்கு களில் 25% முதல் 30% ஈரப்பதம் இருக்கும்.

அங்கிருந்து கேக், ஓரங்கள் வெட்டும் பகுதிக்குச் செல்கிறது. ஓரங்கள் வெட்டப்பட்டவுடன் வில்லைகளாகப் போடப்பட்டு, கவருக்குள் அடைக்கப்படுகிறது. கவர் ஒட்டப்பட்டு, தேதி, எத்தனை நாட்களுக்குள் பயன்படுத்த வேண்டும் போன்ற விவரங்கள் அச்சடிக்கப்பட்டு வெளியே வருகிறது. பிறகு கேக் பாக்கெட்களை பெரிய அட்டைப் பெட்டிகளில் வரிசையாக அடுக்கி வைக்கின்றனர்.

தயாரான கேக் இரண்டு நாட் களுக்குள் கடைகளுக்கு அனுப் பப்படுகிறது.

கடைகளில் முறையாகப் பயன் படுத்தினால் 60 நாட்கள் வரை கேக் கெடாமல் இருக்கும். மில்கா கேக்குகளை சிறிய குழந்தைகள், வயதான வர்கள் என யார் வேண்டு மானாலும் சாப்பிடலாம். அஜீரணப் பிரச்னை ஏற் படாது.

ஒரு நாளைக்கு 12,000 கேக் வில்லைகள் இங்கு தயாரிக்கப்படுகின்றன.

வெண்ணிலா, பைன் ஆப்பிள், ஆரஞ்சு, சாக் லேட், ஃப்ரூட், பட்டர் என ஆறு சுவைகளில் கேக் தயாரிக்கப்படுகிறது. கிறிஸ்துமஸ், புத்தாண்டு நேரங்களில் ஸ்பெஷல் பிளம் கேக்குகளைத் தயாரிக்கின்றனர்.

தமிழ்நாடு தவிர ஆந்திரா, கேரளா, கர்நாடகா, மஹாராஷ்ட்ரா ஆகிய மாநிலங்களுக்கு அனுப்பப் படுகிறது.

1996ஆம் ஆண்டு இந்தத் தொழிற்சாலை துவங்கப்பட்டது. 60 பேர் இங்கு வேலை செய்கின்ற னர்.

எல்லோருக்கும் மில்கா கேக்கு கள் வழங்கப்பட்டன. குழந்தைகள் நிர்வாக இயக்குனருக்கு நன்றி கூறி கை நிறைய கேக்குகளுடன் சந்தோஷமாக கிளம்பினர்.



*"சாப்பாடு போட்டும் அந்தக் காக்கா ஏன் சாப்பிட மாட் டேங்குது?"*

*"ஒரு வேளை அது 'டயட்'ல இருக்கோ என்னமோ!"*

*- அனுராதா ராஜப்பா*

"டமீல்...!"
"ஐயோ, இதென்ன வெடிகுண்டு சத்தம்?"
"ஒண்ணுமில்லைங்க, இங்லீஷ் மீடியத்துல படிக்கிற நம்ம பையன், 'தமிழ்'ன்னு சொல்லிப் பார்க்கறான்!"








"அந்த லிப்ட் ஆபரேட்டருக்கு ஆக்ஸிடண்ட் ஆகி ஆபரேஷன் நடந்துச்சே, இப்ப எப்படி இருக்கார்?"
"படிப்படியா முன்னேறிட்டு இருக்கார்!"

"டேய், உன்னை ஓங்கி ஒரு அறை கொடுத்துட்டுப் போறாரே அவர் உனக்கு என்ன உறவு?"
"ஒண்ணு விட்ட மாமா!"



நீங்களும் ஜோக்ஸ் எழுதி அனுப்புங்கள். சிறந்த ஜோக்ஸுக்குப் பரிசு தரப்படும்.

# பல் எப்படி விழும்?



"டாக்டர், எனக்கு மேலே ரெண்டு பல் விழுந்துடுச்சு."
"தப்பா சொல்லாதீங்க. பல் மேலே விழாது, கீழே தான் விழும்."

# குட்டிகள் எங்கே?

கதை : ராஜலக்ஷ்மி
படம் : பிள்ளை






உடனே அருகிலிருந்த ஓநாய் -
மன்னா, குரங்கார் பொய் சொல்கிறார். குட்டிகளை நான் தான் வைத்திருக்கிறேன். மாமரங்கள் எனக்குத்தான்.
எப்படி நம்புவது?
பணியாட்களை அனுப்பி என் வீட்டிலிருந்து குட்டிகளை எடுத்து வரச் சொல்லுங்கள்.
சபாஷ்! போய் அழைத்து வாருங்கள்.
மன்னா, மாமரங்கள்... எங்கே?
தவறு செய்தவனுக்கு தண்டனை தருவதுதானே நியாயம்?
நன்றாக காய்க்கும் மரங்களாகக் கொடுங்கள்.
ஓநாய் மன்னிப்புக் கேட்டு, தண்டனையிலிருந்து தப்பியது.
நன்றி அரசே! வருகிறோம்.



# முதல் இடத்தில் கும்ப்ளே!

**2004**ஆம் ஆண்டுக்கான டெஸ்ட் தரப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. பந்து வீச்சில் கடந்த ஆண்டு பிரகாசித்த அனில் கும்ப்ளே சர்வதேச அளவில் முதல் இடத்தைப் பிடித்திருக்கிறார். இவர் மொத்தம் 74 விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கிறார். இவருக்கு அடுத்தபடியாக ஆஸ்திரேலியாவின் ஷேன் வார்ன் 70 விக்கெட்டுகளை வீழ்த்தி இரண்டாவது இடத்தில் இருக்கிறார். இங்கிலாந்தின் ஸ்டீவ் ஹார்மிசன் 67 விக்கெட்களை வீழ்த்தி மூன்றாவது இடத்தில் உள்ளார்.

**பே**ட்டிங்கில் ஆஸ்திரேலியாவின் ஜஸ்டின் லாங்கர் முதல் இடத்திலுள்ளார். இவர் 1481 ரன்களைக் குவித்திருக்கிறார். இரண்டாவது இடத்தையும் ஆஸ்திரேலிய வீரரே பிடித்திருக்கிறார். டேமியன் மார்ட்டின் 1353 ரன்களை எடுத்து இரண்டாவது இடத்தில் இருக்கிறார். 1288 ரன்களைக் குவித்து தென்னாப்பிரிக்க வீரர் ஜேம்ஸ் காலிஸ் மூன்றாவது இடத்தில் இருக்கிறார். 1141 ரன்களைக் குவித்த வீரேந்திர சேவாக் ஐந்தாவது இடத்தைப் பிடித்திருக்கிறார்.



• ஷேன்வார்ன்

**இ**ந்திய கிரிக்கெட் அணி வங்க தேச அணியுடன் அந்நாட்டில் மூன்று ஒரு தினப் போட்டிகளில் விளையாடியது. முதல் போட்டியில் இந்தியா எதிர்பார்த்தபடியே வெற்றி கண்டது. வங்க தேச அணியை சாதாரணமாக மதிப்பிட்ட

இந்திய அணிக்கு இரண்டாவது போட்டி அதிர்ச்சி அளித்தது. 15 ரன்கள் வித்தியாசத்தில் இந்திய அணியைத் தோற்கடித்து வங்க தேச வீரர்கள் வெற்றி பெற்றனர்.

இந்த வெற்றி வங்க தேசம் இந்தியாவுக்கு எதிராக பெற்ற



• வெற்றிக் களிப்பில் பங்களாதேஷ் அணி...



• சேவாக்

முதல் வெற்றி. இந்த வெற்றியை வங்க தேச வீரர்கள் மட்டும் அல்லாது நாடே கொண்டாடியது. வங்க தேச அணியின் நூறாவது ஒரு தினப் போட்டியில் பெற்ற வெற்றி அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி விட்டது. 1:1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்த இரு அணிகளுக்கும் இறுதிப் போட்டி மிகவும் முக்கியமானதாகிவிட்டது. இறுதிப் போட்டியில் இந்திய வீரர்கள் வீறு கொண்டு எழுந்தனர். 50 ஓவர்களில் 5 விக்கெட்களை மட்டும் இழந்து 348 ரன்களை எடுத்தனர். 349 ரன்கள் எடுக்க வேண்டிய கட்டாயத்தில் வங்க தேச அணி களமிறங்கியது. 50 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 257 ரன்களை மட்டுமே எடுத்தது. 2:1 என்ற கணக்கில் இந்திய அணி கோப்பையைப் பெற்றுக் கொண்டது. சமீப காலங்களில் வங்க தேச அணி சிரத்தை எடுத்து ஆடி வருவதைப் பார்க்க முடிகிறது.

ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றன. மூன்று போட்டிகளைக் கொண்ட தொடரில் முதல் இரண்டு போட்டிகளிலும் ஆஸ்திரேலிய அணி வென்று தொடரைக் கைப்பற்றியது. ஆஸ்திரேலிய அணி மட்டும் எப்போதும் ஃபார்மில் இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது!



# நிறை...குறை...

பீர்பாலின் மகள் ஐந்து வயது சிறுமி. மிகவும் சாதுர்யமாகப் பேசுவாள். ஒரு நாள் நானும் அரண்மனைக்கு வருவேன் எனத் தந்தையிடம் அடம் பிடித்தாள். பீர்பாலும் மறுக்க முடியாமல் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்.

அவள் அரசரைப் பார்ப்பது அதுவே முதல் முறை. எனினும் சிறுமி மிகவும் மரியாதையோடு அரசரை வணங்கிவிட்டு நின்று கொண்டிருந்தாள்.

அக்பர் பிரியத்தோடு சிறுமியை அழைத்து, "குழந்தாய், உனக்கு ஏதேனும் சொல்லத் தெரியுமா?" என்று கேட்டார்.

"ஓ! எனக்கு நிறையவும் குறையவும் பேசத் தெரியுமே!" என்று கூறினாள் சிறுமி.

"குறையவும் நிறையவும் என்றால் என்ன அர்த்தம்?" எனக் கேட்டார் அக்பர்.

"பெரியோர் முன் குறைவாகப் பேச வேண்டும். சிறுவர் முன் நிறையப் பேச வேண்டும்" என விளக்கம் கூறினாள் சிறுமி.

"புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? தந்தையைப் போல மகளும்" என்று இருவரையும் புகழ்ந்து பாராட்டியதோடு சிறுமிக்குப் பரிசுகளை அளித்தார் அக்பர்.

பாட்டு, நடனம், ஓவியம் என்று மற்ற குழந்தைகள் போலவே திறமைசாலியாக இருக்கும் அம்ருதாவுக்கு மட்டும் கடவுள் அளித்த மற்றொரு அற்புத கொடை நகைச்சுவை. ஆறு முதல் அறுபது வயது வரையிலான ஆயிரம் பேர் கொண்ட கூட்டத்தில் சரமாரியாக நகைச்சுவை வெடித்து, சிறந்த நகைச்சுவையாளர் என்ற பட்டத்தை சென்னை ஹியூமர் க்ளப்பிலிருந்து பெற்றிருக்கிறார் அம்ருதா. இவருடன் ஒரு ஹா... ஹா... ஹா... பேட்டி.

ஹாய் அம்ருதா. நீ காமெடி பண்றதுல ஏதாவது காமெடியான






# நகைச்சுவை இளவரசி!

கவர் ஸ்டோரி



**கதை இருக்கா?**

(புன்னகையோடு ஆரம்பிக்கிறார்) ம்... பெசன்ட் நகர் ஹியூமர் க்ளப்புக்கு முதல்ல தாத்தாதான் போயிட்டிருந்தார். திடீர்னு ஒரு நாள் அங்கே நடக்கிற குழந்தைகள் நிகழ்ச்சிக்காக என்னை தயார் பண்ணி ஜோக்கெல்லாம் சொல்லிக் கொடுத்தார். 'ஹைய், இதென்ன புதுசா இருக்கே'ன்னு நானும் ஜாலியாகி அந்தக் கூட்டத்துல ஜோக்கெல்லாம் அள்ளி வீச, ஆச்சர்யம்! நான் சொன்ன ஜோக்குக்கு எல்லோரும் விழுந்து விழுந்து சிரிச்சாங்க. கூத்தபிரான் சார் ரொம்பவும் பாராட்டினார். அதுக்கப்புறம் நாரதகான சபாவுல ஆயிரம்பேர் முன்னாடி ஜோக் சொல்லி அவார்ட் வாங்கினேன். இப்போ கூட ஆதம்பாக்கம் ஹியூமர் க்ளப் விழாவுல நான் சீஃப் கெஸ்டா கலந்துக்கிட்டேன்.

**ஆயிரம் பேரா, அம்மாடி உனக்கு பயமா இல்லையா?**

சேச்சே, மேடையில ஏறின பிறகு என் முன்னாடி இருக்கிறவங்க எல்லாம் என் ஃப்ரெண்ட்ஸ்ன்னு நினைச்சுப்பேன். பயம் போயே போயிந்தி, இட்ஸ் கான்.

**பிரபலங்கள் பாராட்டெல்லாம் கிடைச்சிருக்காமே?**

பெசன்ட் நகர் ஹியூமர் க்ளப் ஆண்டு விழாவுல பட்டிமன்ற புகழ் ராஜா அங்கிள் நான் சொன்ன ஜோக்ஸையெல்லாம் தன் பேச்சுல குறிப்பிட்டு சொன்னார். திடீர்னு 'அம்ருதாவை பாருங்க எப்படி சிரிச்சுட்டு இருக்கு'ன்னு சொல்ல, ஹையோ எல்லோரும் என்னையே பார்த்தாங்க. அப்புறம் கிரேஸி மோகன் அங்கிள் நான் சொல்ற ஜோக்ஸையெல்லாம் கேட்டுட்டு, தன் மனைவி கிட்டே, ''அம்ருதாவை பார்த்தா பயமா இருக்கு, பாரு எவ்வளவு எக்ஸலண்டா ஜோக் சொல்றா''ன்னு சொல்ல, எனக்கு சந்தோஷம் தாங்க முடியலை!

**நீ சொல்ற ஜோக்குக்கெல்லாம் எப்படி எல்லோரும் சிரிக்கறாங்க?**

முதல்ல சொல்லப்போற ஜோக்கை நல்லா புரிஞ்சுப்பேன். அப்புறம் எப்படி சொன்னா ஆடியன்ஸ் சிரிப்பாங்கன்னு கன்வர்ட் பண்ணுவேன். அதுக்கேத்த மாதிரி குரல்ல மாடுலேஷன், முகத்துல எக்ஸ்பிரஷன் எல்லாம் கொண்டு வருவேன். அவ்வளவுதான்!

**பி.எஸ். இங்லீஷ் மீடியம் ஸ்கூல்ல படிச்சுட்டு அழகா தமிழ் பேசறீயே?**

தமிழ் என் தாய்மொழி.

**யார் அந்தப் பிரபலம்?**



**இன்னொருவருடன் இணைந்து பெரும் சாதனை படைத்தவர்.**

அம்மா வீட்ல பாடம் நடத்தும் போது 'என்ன டிஃப்ப ரென்ஸ்'ன்னு கேக்காம 'என்ன வேற்றுமை'ன்னு சுத்த தமிழ்ல தான் கேள்வி கேட்பாங்க. அத னால உச்சரிப்பு சுத்தமா பேசு வேன்.

**சரி, உனக்குப் பிடிச்ச ஜோக்?**

ஒருத்தர் தன் பையனை ரோட்ல போட்டு செமத்தியா அடிச்சுட்டு இருந்தாராம். பதறிப் போய் பக்கத்து வீட்டுக்காரர் என்னன்னு கேட்க, பாருங்க ட்யூசனுக்கெல்லாம் அனுப் பறேன். ஆனா இவனுக்கு சன்னுக்கும் மூனுக்கும் வித்தி யாசம் தெரியலைன்னு பதில் சொன்னாராம். அதுக்கு பக்கத்து வீட்டுக்காரர், அடப்பாவி இவனுக்காவது சன்னுக்கும் மூனுக்கும்தான் வித்தியாசம் தெரியலை. ஆனா உனக்கு, என் பையனுக்கும் உன் பையனுக் குமே வித்தியாசம் தெரியலை யேன்னு சொன்னாராம்! (சொல்லி விட்டு விழுந்து விழுந்து சிரித்தாள்)

**வருங்காலத்துல என்ன ஆகப்போறே?**

டாக்டராகணும். இதை நான் கிரேஸிமோகன் அங்கிள்கிட்ட சொன்னப்போ 'operating tumour injecting humour'ன்னு டைமிங்கா ஜோக் அடிச்சார். நான் கூட ஊசியெல்லாம் போடாம ஜோக் அடிச்சே நோய்களைக் குணப் படுத்த முயற்சி செய்வேன்.

**- ச.ந.கண்ணன்**

அட்டை மற்றும் படங்கள் : **ஸ்ரீஹரி**

# 1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

டிசம்பர் போட்டியில் நிறையப் பேர் கலந்து கொண் டனர். சரியான விடை அளித்த வர்களில் இருந்து 5 பேர் பரிசுக் குரியவர்களாகத் தேர்ந்தெடுக் கப்பட்டனர்.

**பரிசு யாருக்கு?**

1. எம்.எம்.ரேகா, பதினோராம் வகுப்பு, அரசு மேல் நிலைப்பள்ளி, நல்லூர்.
2. என். ரமேஷ், பன்னிரண்டாம் வகுப்பு, திருநெல்வேலி.
3. டி.நிவேதிதா, மூன்றாம் வகுப்பு, தூய அந்தோனி மேல் நிலைப் பள்ளி, சேலம்.
4. சு. நித்யா, ஒன்பதாம் வகுப்பு, சீதா கிங்ஸ்டன் மேல்நிலைப் பள்ளி, சென்னை.
5. எல்.நிஜந்தன், பத்தாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, பேரங்கியூர், விழுப்புரம்.

**சரியான விடை:**

1. அம்மான் 2. அராபிக்
3. இர்பையிட், ஜார்கூவா
4. தினார்
5. சாக்கடல்
6. ஜோர்டான்



*பரிசுப் பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.*

# கிரிப்பட்டிணம்

முன்னொரு காலத்திலே கிரிப்பட்டிணம் ஓர் ஊர். அந்த ஊர் ராஜாவுக்குக் கண் மணின்னு ஒரே ஒரு பெண். ராஜகுமாரி ரொம்பச் செல்லமா வளர்ந்தாள். தினமும் சாப்பிடற துக்கு லட்டு, மிட்டாய், ஜிலேபி தான்...

ராஜகுமாரிக்கு ஏழு வயது ஆனபோது ஒரு மாறுதல் ஏற்பட் டது. தினமும் சந்தோஷமா ஓடி ஆடுபவள் சோர்ந்து உட்கார்ந் தாள். நாளடைவில் மாலை நேர மானால் கண் சரிவரத் தெரிய



லைன்னு அப்பா கிட்டே சொன் னாள்.

இதனால் ரொம்ப கவலைப்பட்ட ராஜா, எல்லா வைத்தியர்களையும் கூப்பிட்டு வைத்தியம் செய்தான். ஆனால் ஒண்ணும் பலிக்கலே.

அதனாலே, முனிவர்கிட்டே போய்த் தன் கவலைதீர வரம் கேட்கலாம்னு தன் பரிவாரத் துடனும் மகள் கண்மணி யுடனும் காட்டுக்குப் போனான்.

ஒரு குளத்தின் கரையிலே எல்லாரும் தங்கினாங்க. அப்போ கொஞ்சத் தொலைவிலே ஒரு சிறுவன் ரொம்ப உயரத்திலே இருக்கிற மாம்பழங்களை அம்பி னாலே சுலபமா அடிக்கிறதைப் பார்த்த ராஜா அந்தப் பையனை அழைச்சிட்டு வரத் தன் வீரர் களை அனுப்பினான்.

மாம்பழங்களைக் கொண்டு வந்து ராஜாகிட்டே தந்த சிறு வன் வணங்கினான். ராஜா, அந்தச் சிறுவனுடைய பார்வை அவ்வளவு தெளிவா இருக்கிற காரணத்தைக் கேட்ட போது, அவன் அதற்குத் தன் பாட்டிதான் பதில் சொல்ல முடியும் என்றும் அவன் வீடும் மிக அருகிலேயே இருப் பதாகவும் சொன் னான்.

அந்தச் சிறுவன் ராஜாவை அழைச் சுக்கிட்டுத் தன் வீட்டுக் குப் போனான். பாய்விரித்தாற் போல பசுமையான பாத்தி களுக்கு நடுவே அமைந்த அழகான சிறு குடிசை. ராஜா வருவதை வெகு தூரத்தி லிருந்தே அடையாளம் கண்டு கொண்ட பாட்டி ராஜாவை வர வேற்றாள்.

ராஜா அந்தப் பாட்டியிடம்

தன் மகளுடைய கதையைச் சொன்னான். அதற்குப் பாட்டி ராஜகுமாரியை அவளுடன் சிறிது காலத்திற்கு விட்டுச் செல்லும் படி கூறினாள்.

ராஜகுமாரியும் மிக்க மகிழ்ச்சியுடன் சம்மதம் தெரிவிக்கவே, அரசனும் அவளைவிட்டுவிட்டு அரண்மனைக்குத் திரும்பினான்.

**ரா**ஜகுமாரிக்குக் காட்டு வாழ்க்கை ரொம்பப் பிடித்தது. பாட்டி சமைத்த சத்துள்ள சுவையான சாப்பாட்டை ரொம்பப் பிரியமாக சாப்பிட்டாள்.

அந்தச் சிறுவன் சந்திரனும் அவளுக்கு வில்வித்தை சொல்லிக் கொடுத்தான்.

இப்படியே கொஞ்ச காலத்திலே பாட்டி கொடுத்த சத்துணவினாலே ராஜகுமாரியின் பார்வை நல்ல ஒளி பெற்றுக் குணமாயிடுச்சு. சில காலம் கழித்து, ராஜா தன் மகளை அழைச்சிட்டுப் போக வந்தான். அப்போது அவளும் சந்திரனைப் போலவே வெகு சாமர்த்தியமாக உயரத்திலுள்ள பழங்களை அம்பினாலே வீழ்த்துவதையும் அவள் கண்கள் நல்லா குணமானதையும் பார்த்து ரொம்ப சந்தோஷப் பட்டான்.

உடனே, பாட்டியிடம் தன் சந்தோஷத்தைத் தெரிவித்து மகளைக் குணப்படுத்தின மந்திரசக்தி என்னன்னு கேட்டான். அப்போ பாட்டி, அவள் தயாரித்த சத்துள்ள சாப்பாடு தான் ஆரோக்கியத்தைக் காப்பாத்தினது என்றாள்.

ராஜாவுக்கு ஆச்சரியமாப் போச்சு! பாட்டி, தன் வீட்டைச் சுத்தி இருக்கற கீரைப்பாத்தி, காய்கறித் தோட்டதைக் காட்டினாள். அதிலிருந்து தினமும் கீரை வகைகள், பச்சைக் காய்கறிகள், மாம்பழம் பப்பாளி போன்ற பழங்கள் உணவுலே சேர்த்துக்கிறதாகச் சொன்னாள். கண்ணுக்கு ஒளி தர்ற மந்திர சக்தி கீரையிலே தான் இருக்குன்னு ராஜாக்குப் புரிஞ்சுது.

உடனே ராஜா, தன் அரண்மனையிலும் தன் நாட்டு மக்கள் எல்லோர் வீட்டிலும் கீரை பயிரிட வேண்டும் என்றும் தினசரி உணவில் கீரையை அவசியம் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அந்த நாட்டில் கண் பார்வை மங்கினவர்களே இல்லாமல் செய்ய வேண்டும் என்றான். அன்று முதல் கிரிப்பட்டிணம் கீரைப் பட்டிணம் என்று வழங்கப் படும்னு உத்திரவு போட்டான்.



## ஜெயிக்கும் வழி!

**போ**ர்க்களத்தில் சண்டையிட்டு ஜெயிப்பதற்கு ஒரு சிறந்த வழி சொல்லுங்கள்'' என்று பத்திரிக்கையாளர் ஒருவர் காந்தியடிகளிடம் கேட்டார். காந்தியடிகள் ''போர்க்களத்தில் ஜெயிக்க வேண்டுமா? அதற்கு ஒரே ஒரு சிறந்த வழி சண்டை போடாமல் இருப்பது தான்'' என்றார்!



• அழ. வள்ளியப்பா

## மன்னிப்புக் கேட்க மாட்டேன்!

**சு**தந்திரப் போராட்டக் கால கட்டத்தில் பாராளுமன்றத்தில் வெடிகுண்டு வீசியதாக வீர இளைஞர்கள் பகத்சிங், சுகதேவ், ராஜகுரு மூவரின் மீதும் வெள்ளை அரசாங்கம் சிறை பிடித்து வழக்குத் தொடுத்தது. இதில் மூவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. வழக்கு நடந்து கொண்டிருந்தபோது பகத்சிங்கின் அம்மாவிடம் சென்று ''ஒரு மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுங்கள். உங்கள் மகன் பகத்சிங்கை விட்டு விடுகிறோம்'' என்றது வெள்ளைக்கார ஏகாதிபத்தியம். அதற்கு பகத்சிங்கின் தாய் ''என் மகனுக்கு மரண தண்டனை கிடைத்தாலும் அஞ்ச மாட்டேன் அதற்காக மன்னிப்பு கேட்பது கோழைத்தனம்'' என்றார்.

- ந.சுகன்யா,
எட்டாம் வகுப்பு,
பியர்ல் அறக்கட்டளை,
பரமக்குடி

# நான்காவது

• பகத்சிங்



## பொருத்தமான அடி!

**க**ல்லூரி நிகழ்ச்சி ஒன்றில் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் பேசும்போது, ஒரு சுவையான செய்தியைச் சொன்னார். ''எங்கள் தமிழாசிரியர் ஒரு தலைப்பைக் கொடுத்து கட்டுரை எழுதச் சொன்னார். கட்டுரையில் மேற்கோள் காட்டுவதற்காக நாலடியாரின் ஒரு பாட்டை எழுத



• தாலமி

முயன்றேன். மூன்று அடிகளை எழுதி விட்டேன். நாலாவது வரி நினைவுக்கு வரவில்லை. எனவே சொந்தமாக ஒரு வரியை எழுதி அப்பாடலைப்


# அடியார் யார்?

பூர்த்தி செய்துவிட்டேன். மறுநாள் ஆசிரியர், கட்டுரைகளைப் பற்றிக் குறிப்பிடும் போது, ''இங்கே நாலாவது அடியார் ஒருவர் இருக்கிறார். அவர் யார் தெரியுமா?'' என்று கேட்டுவிட்டு, என்னை அழைத்து ''இவர்தான் அவர்'' என்று காட்டினார். பிறகு என்னிடம், ''நீ எழுதிய நாலாவது அடி பொருத்தமாகத்தான் இருக்கிறது. ஆனாலும் பிறருடைய பாட்டை மாற்றும் உரிமை நமக்கு இல்லை. உன்னால் சொந்தமாக பாட்டு எழுத முடியும்'' என்று உற்சாகப்படுத்தினார் ஆசிரியர்.

- அ. பேச்சியப்பன்,
ராஜபாளையம்

## ஒரே வழி!

கணிதத்தில் சிறந்து விளங்கிய அறிஞர் தாலமியிடம் அலெக்சாந்திரியா அரசர் ஒரு சமயம் ''நான் கணிதத்தில் தேர்ச்சி பெற விரும்புகிறேன். அதற்கு ஏதேனும் எளிய வழி உள்ளதா?'' என்று கேட்டார். அதற்கு தாலமி ''அரசே! இந்த நாட்டில் பொது மக்கள் பயணம் செய்வதற்குக் கரடுமுரடான சாலையும் உங்களைப் போன்ற அரசர்களும் பிரபுக்களும் பயணம் செய்வதற்கு மென்மையான சாலைகளும் உள்ளன. ஆனால், கணிதம் கற்க எல்லோரும் ஒரே சாலை வழியாகத்தான் செல்ல வேண்டும். அங்கே அரசர்கள் கற்பதற்காகத் தனியான மென்மையான எளிய சாலை இல்லை'' என்று பதில் தந்தார்.



• காந்தியடிகள்


- கே.என். மகாலிங்கம்,
பாண்டிச்சேரி

உலகப் படத்தின் அடியில் சிறிய அளவில் கடலில் மிதந்து கொண்டிருக்குமே, அதுதான் ஆஸ்திரேலியா! உலகின் மிகச் சிறிய கண்டம் தான்! 17ம் நூற்றாண்டுக்கு முன் வரை இந்த ஆஸ்திரேலியாவை யாருக்கும் தெரியாது. முதன்முதலில் பிரிட்டிஷ்காரர்கள் கைதிகளை இந்நாட்டிற்குள் கொண்டு வந்தனர். கி.பி. 1788ம் ஆண்டு, ஜனவரி 26ம் நாள், ஆஸ்திரேலியா ஒரு நாடாகப் பிறப்பெடுத்தது. எனவே ஆண்டுதோறும் ஜனவரி 26ம் தேதியை 'ஆஸ்திரேலிய தினமாக' அம்மக்கள் கோலாகலமாக, பட்டாசு வெடித்து கொண்டாடுகிறார்கள்.

ஆஸ்திரேலியாவின் பூர்வ குடிகள் அபார்ஜின்கள். இவர்கள் சுமார் 40,000 ஆண்டுகளுக்கு முன், ஆசியப் பகுதிகளிலிருந்து வந்திருக்கலாம் என கருதப்படுகிறது. 1901ம் ஆண்டில் இது காமன்வெல்த் நாடு என்று அறிவிக்கப்பட்டது. இதில் நியூ சவுத் வேல்ஸ், விக்டோரியா, குவின்ஸ்லாந்து, தெற்கு ஆஸ்திரேலியா, மேற்கு ஆஸ்திரேலியா, டாஸ்மேனியா என்ற ஆறு பிரிட்டிஷ் காலனிகளும்

# கங்காருகளின்









இரண்டு யூனியன் பிரதேசங்களும் சுற்றிலும் சில தீவுகளும் உள்ளன. ஆஸ்திரேலியாவில் தட்டையான நிலப் பரப்பே அதிகம். அதிலும் பெரும் பகுதி பாலைவனம். சமவெளிகளைச் சுற்றி ஆழம் குறைந்த அழகான கடற்கரைகள் உண்டு. ஆஸ்திரேலியாவின் தேசிய மொழி ஆங்கிலம். டாலர்தான் இந் நாட்டு கரன்ஸி. கங்காருவும் கசுவாரியும் தேசிய சின்னம்!

உலகின் பெரிய நகரங்களான சிட்னியும் மெல்போர்னும் இங்குதான் உள்ளன. இங்கு காணப்படும் உயிரினங்களும் தனிச் சிறப்பு வாய்ந்தவையே! மத்திய ஆஸ்திரேலியாவில் காணப்படும் 'ராயன் தேசிய பூங்கா'. அமெரிக்க மஞ்சள் பாறை பூங்காவுக்கு அடுத்து பெரியதாகும்! உலகின் மிகப்பெரிய ஒற்றைப் பாறை 9 கி.மீ. சுற்றளவில், 1,142 மீட்டர் உயரத்தில் அழகாக அமைந்துள்ளது. உலகின் மிக நீளமான பெரிய பவளப்பாறை திட்டுகள் குவின்ஸ்லாந்தில் தான் உள்ளன.

மெல்போர்னில் லெபனானியர், வியட்நாமியர், கிரேக்கர்கள்,






மோகனா





# நாடு!







சீனர்கள், ஐரிஷ் காரர்கள் என பல நாட்டினரும் வாழ்வதால், இங்கு பன்முக கலா சாரமே நிலவு கிறது. பூர்வகுடி கள் 2% மட்டுமே! மக்கள் தொகை யில் 95% பேர், தங்கத்துக்காக வெளிநாட்டிலிருந்து இடம் பெயர்ந் தவர்கள்! இங்குள்ள கட்டடங்கள் 19ம் நூற்றாண்டின் கலையழ குடன் மிளிர்கின்றன. மெல் போர்ன் பல்கலைக் கழகத்தில் பயிலும் 30,000 மாணவர்களில், 2,000பேர் அயல்நாட்டினரே!



• திருவிழாவில் நடனம்



• அபார்ஜின்கள்

குவின்ஸ்லாந்தை 'தங்கத் துறைமுகம்' என்றே அழைக்க வேண்டும். உலகில் 13% தங்கம் இங்கிருந்து சிங்கப்பூர், ஜப்பான், ஸ்விட்சர்லாந்து, ஹாலந்து போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

1973ம் ஆண்டு சிட்னி துறைமுகத்தில் கட்டப்பட்ட 'ஒபரா வீடு' உலக மக்களின் கவனத்தை ஈர்ப்பதுடன், அற்புத மான கட்டடக்கலைக்கு எடுத் துக்காட்டாக விளங்குகிறது. உலகின் நீளமான வளைவுப் பாலமும் மோனோ ரயிலும், 'பெரிய திரைப்படத் திரை', அருங்காட்சியகங்கள், மனித ஆராய்ச்சிகள், பெரிய துறைமுகம் எல்லாம் சிட்னியின் சிறப்பு அம்சங் கள்!

கக்கட்டோ எனப்படும் பலவண்ணக் கிளிகள் இங்கு மட்டுமே காணப்படு கின்றன. வெள்ளை கக்கட்டோ மற்ற பறவை களின் ஒலியை 'மிமிக்ரி' செய் யும். மனிதன் சிரிப்பதைப் போல் 'சிரிக்கும் ஜாக்கஸ்' பறவையும் உண்டு. அழகான இறகுகளுடன் லையர் பறவை இங்கு உள்ளது.

அபார்ஜின்களின் நாகரிகம்

மிகவும் பழமை வாய்ந்தது. இவர்கள் குழுக்களாய் வாழ்வதுடன், 200 மொழிகள் பேசுகின்றனர். இவர்களின் கலை 18,000 ஆண்டு பழமை பெற்றது. குகைகள், பாறைகள் போன்ற இடங்களில் படங்கள் வரைந்து திறமையை வெளிப்படுத்தி உள்ளனர். இவர்கள் பல சமூகத் திருவிழாக்களைக் கொண்டாடுகின்றனர். இவர்களின் கலாசாரமே அலாதியானது. இங்குள்ள ஜிம் ஜிம் நீர்வீழ்ச்சியை, கோடை காலம் தவிர மற்ற காலங்களில் ஹெலிகாப்டரில் பறந்துதான் ரசிக்க முடியும்!

மத்திய ஆஸ்திரேலிய குழந்தைகள் செம்பட்டை முடியுடன் காணப்பட்டாலும், வயதானதும் நிறம் கறுப்பாகிவிடுகின்றது. குழந்தைகளுக்கு 'பூமராங்' விளையாட்டு சொல்லித்தரப்படுகிறது. கலாசார நாளில் பாரம்பரிய நடனங்கள் நடத்தப்படுகின்றன. தென் பகுதியின் மிகப் பெரிய விழாவான உணவுத் திருவிழாவில் உலகம் முழுவதிலிருந்தும் சுமார் 50,000க்கும் மேற்பட்ட உணவு





விரும்பிகள் பங்கேற்று, 100 வகை விளையாட்டுகள் நடத்துவர். ஆண்டுக்கு ஒருமுறை விக்டோரியாவில் இது நடக்கிறது.

நம்மூர் போலவே அங்கும் அறுவடைத் திருவிழா கொண்டாடுகின்றனர். ஆனால் நடப்பது ஜனவரி முதல் வாரத்தில்தான்! லாவண்டர் பூ பூக்கும் காலத்தில் அதிலிருந்து எண்ணெய் எடுத்து, வாசனை திரவியங்கள் செய்கின்றனர். சிட்னியில் கி.பி.2000ம் ஆண்டில் ஒலிம்பிக் நடந்த தென்றால், ஆஸ்திரேலியாவின் பெருமையை எண்ணிப் பாருங்கள்! கீர்த்தி சிறிதானாலும் மூர்த்தி பெரியதுதான்!




# எனக்கு இரண்டு; உனக்கு ஒன்று!






சரி, உனக்கு என்ன வேணும்?
அப்பம செய்யலாமா?
உன் விருப்பம்.
மறுநாள்-
அரிசிமாவும் சர்க்கரையும் இருக்கு. அப்பம் செய்.
சிறிது நேரத்தில்
அப்பம் தயார்.
ஆஹா!
என்ன, எனக்கு ஒண்ணு தான் தர்றே?
எனக்கு இரண்டு வேணும்.
அதெல்லாம் முடியாது. நான் தானே அரிசியும் சர்க்கரையும் கொண்டு வந்தேன்!
ஆனால் அப்பம் செய்தது நான் தானே?


நான் சொல்வதைக் கேள். அப்பத்தை நாம் இப்ப சாப்பிட வேண்டாம்.
அப்புறம்?
தூங்குவோம். யார் கடைசியாக எழறோமோ அவங்களுக்கு இரண்டு அப்பம்.
நல்லது!
இருவரும் படுத்தனர்.
நான் முதலில் எழக் கூடாது.
எனக்குத்தான் இரண்டு அப்பம்.
மூன்று நாட்கள் ஆனது. அக்கம்பக்கத்தவர்களுக்கு சந்தேகம் வந்தது.
எங்கே அந்த பாட்டி, தாத்தா?
உடல் நிலை சரியில்லாமல் உள்ளே இருக்கிறார்களோ?
போய்ப் பார்க்கலாம்.


ஜன்னல் வழியாகப் பார்த்தனர்.
தூங்கிட்டு இருக்காங்களே!
அரண்மனை காவலர்களுக்குத் தெரிவிப்போம்.
JINGLE BELL CREATIONS
காவலர்கள் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே வந்தனர்.
ஐயோ, இருவரும் இறந்து விட்டனர்.
காவலர்கள் மயானத்தில் விறகுகளை அடுக்கி, நெருப்பு வைத்தனர்.
நான் தான் வென்றேன்.
இல்லை நான் தான்...
ஆ!
காவலர்கள் அரசரிடம் விவரம் கூறினர்.
அவர்களை அழைத்து வாருங்கள்.
இருவரும் அரசரிடம் அழைத்து வரப் பட்டனர்.
மன்னா, எங்களை ஏன் அழைத் தீர்கள்?
நீங்கள் இருவரும் இங்கு தங்கி, பிடித்த உணவு களைச் சாப்பிடுங் கள்.
SUBRAM
இருவரும் அரண்மனையில் வேலை செய்து நீண்ட காலம் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

# நிலாச்சோறு



**சி**ன்னஞ் சிறிய வயதினிலே
சிரிக்கும் நிலவின் முகம் பார்த்து
அன்னை அணைப்பில் சிலகாலம்
அமர்ந்து புசிப்பது நிலாச்சோறு!

பின்னர் பள்ளி வயதினிலே
பெற்றோர் அண்ணன் தம்பியுடன்
ஒன்று கூடி நிலவொளியில்
உவந்து புசிப்பது நிலாச்சோறு!

இன்னும் வாலிப வயதினிலே
இன்பச் சுற்று உலாவினிலே
சென்று சித்திரை முழுநிலவில்
சேர்ந்து புசிப்பது நிலாச்சோறு!

விண்ணில் உள்ள நிலவினிலே
வீட்டைக் கட்டி அதன் முன்பாய்
மண்ணில் உள்ள மனிதருடன்
மகிழ்ந்து புசிப்பது நிலாச்சோறு!

**தளவை இளங்குமரன்**

# சூப்பர் ஐடியா!


கதை: ஸ்ரீரா. ரவிவர்மன் படம்: சேகர்




திடீரென  வர ஆரம்பித்தது. அருகில் இருந்த  னைப் பறித்து  யாக வைத்துக் கொண்டது .  யிடம் "உன்  யில் எனக்கும் கொஞ்சம் இடம் கொடேன்" என்றது .

"இருப்பதோ சின்னக்  எப்படி இரண்டு பேர் போக முடியும்?" என்று ,  யிடம் கேட்டது.  யில் நனைந்து கொண்டு சென்றால் அம்மா அடிப்பார்களே என்று  வருந்தியது.

அப்போது அங்கு வந்த  இவர்கள் பிரச்னையைக் கேட்டறிந்தது.

"நான் ஒரு  கூறுகிறேன். இருவரும்  யில் நனையாமல் செல்லலாம்" என்றது.

"என்ன?" என்று ,  இரண்டும் கேட்டன.

"  நீ கையில்  யைப் பிடித்துக் கொள்ள வேண்டும்.  நீ  யை உன் மேல் ஏற்றிக் கொண்டு செல்ல வேண்டும். அவ்வாறு செய்தால் இருவரும்  யில் நனையாமல் செல்லலாமே?" என்று  கூறியது.

"அட! இது 'சூப்பர்  வா' இருக்கே!" என்றது .

 இருவரும்  க்கு நன்றி கூறிவிட்டு அங்கிருந்து மகிழ்ச்சியாக  யில் நனையாமல்  போய்ச் சேர்ந்தன.

மனமே நலமா?

# பரீட்சை

அன்புள்ள டாக்டருக்கு,

நான் எட்டாம் வகுப்பில் படிக்கிறேன். எதிர்காலத்தில் டாக்டராகி மக்களுக்கு சேவை செய்ய விரும்புகிறேன். அதற்காக வீட்டில் எந்நேரமும் படித்துக் கொண்டிருப்பேன். என்றாலும் பரீட்சைகள் நெருங்கும்போது எனக்குள் பயம் வந்துவிடுகிறது. படித்தவற்றில் பாதி மறந்துவிடுகிறேன். அதனால் அதிக மார்க்குகள் வாங்க முடியவில்லை. என் பயம் போகவும் நான் படித்தவை எல்லாம் மனதில் நிற்கவும் ஒரு நல்ல யோசனை சொல்லுங்கள் டாக்டர்.

- **வே. கவிதா,**
**வேலூர்**

அன்புள்ள கவிதாவுக்கு,

எதிர்காலத்தில் டாக்டராகி மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற உன் உயர்ந்த எண்ணத்தைப் பாராட்டுகிறேன். நிச்சயம் நீ டாக்டராகி விடலாம். காரணம் நீ கடினமாக உழைத்துப் படிப்பதற்குத் தயாராக இருக்கிறாய். இதுவே உன் வெற்றிக்கு முதல் படி. எந்நேரமும் படித்துக் கொண்டிருந்தாலே நன்றாகப் படித்து விடலாம் என்று எண்ணுவது தவறு. படிப்பதிலும் சில நெறிமுறைகள் உள்ளன.

வகுப்பில் ஆசிரியர் பாடங்களை நடத்தும்போது கூர்ந்து ஆர்வத்துடன் கவனி. பாடங்களில் சந்தேகம் வந்தாலோ, புரியாவிட்டாலோ உடனே ஆசிரியரிடம் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள். புரிந்து படிக்காத பாடங்கள் தாமரை இலைத் தண்ணீர் போல மனதில் தங்காது. வீட்டிற்கு வந்ததும் அன்றைய பாடத்தை அன்றைக்கே படித்துவிடு. பாடங்களை குறைந்தது இருமுறை வாசித்த பிறகு படிக்கத் தொடங்கு. எந்தப் பாடத்தை முதலில் படிப்பது, எவ்வளவு நேரத்தில் படித்தால் எல்லா பாடங்களையும் படித்து முடிக்கலாம் போன்ற நேரக் கணிப்பையும் நேர நிர்வாகத்தையும்



# பயம்!

தெரிந்து கொள். கடினம் எனக் கருதும் பாடத்தை முதலில் படி. எளிதாக உள்ளதை இறுதியில் வைத்துக் கொள்.

அரைமணி நேரம் வீட்டுப் பாடம் எழுதுவது, அரைமணி நேரம் படிப்பது, நடுவில் சிறிது ஓய்வு. பின்பு இரவு உணவு. அடுத்த அரைமணி நேரம் படித்ததை ஒப்புவிப்பது அல்லது எழுதிப் பார்ப்பது என்று பிரித்துக் கொண்டால் பாடங்களைக் கற்பது எளிது. இரவில் 10 மணி வரை படித்தால் போதும். அதிகாலையில் எழுந்து ஏற்கெனவே படித்ததை மீண்டும் படி.

படித்த பாடங்களை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திப் பார். அப்போதுதான் படித்தவை அனைத்தும் நினைவில் நிற்கும். அப்படியும் மறக்கிறது என்றால் உன் நினைவாற்றலுக்கு ஏதோ எதிரிகள் உண்டு என்று பொருள். பயம், பதற்றம், மன அழுத்தம், தாழ்வுமனப்பான்மை, ஏமாற்றம், சோம்பேறித்தனம், கவனக்குறைவு போன்றவை முக்கியமான எதிரிகள்.

உன்னைப் பொறுத்த அளவில் பயமும் தாழ்வுமனப்பான்மையும் எதிரிகள். இவர்களை விரட்டுவதற்கு நீ கைக்கொள்ள வேண்டிய ஆயுதம் 'தன்னம்பிக்கை', தமிழகத்தில் இன்னொரு டாக்டர் கிடைத்துவிட்டான் என்று இன்றைக்கே நம்பிக்கை கொள். உன் திறமைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்து. தினமும் காலையில் எழுந்ததும் 10 நிமிடங்கள் தியானம் அல்லது யோகா செய். மாலை நேரங்களில் சிறிது நேரம் விளையாடு. நல்ல



புத்தகங்களைப் படி. இதனால் மனம் லேசாகும். மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பதைக் கைவிடு. ஆளுக்கு ஆள் திறமைகள் வேறுபடும். டிரைவர் சீட்டில் உட்காருவதற்கே பயந்தால் கார் பந்தயத்தில் எப்படி ஜெயிப்பது? நீ கவலைப் படத் தேவையில்லை. உன் திறமைகள் வளர வளர மார்க்குகளும் கூடும். நம்பிக்கையோடு விடாமுயற்சியுடன் செயல்படு. உனக்கு வெற்றி நிச்சயம். நீ சிறந்த டாக்டராகி நம் மக்களுக்கு சேவை செய்ய என் வாழ்த்துகள்.

**டாக்டர் கு.கணேசன்**

**நீங்களும் கேள்விகளை எழுதி அனுப்பலாம்.**

# புதையல் தீவு

குண்டர்களின் இரும்புப் பிடியில் பாலு அகப்பட்டுக் கொண்ட அதே சமயம், அங்கே பாழடைந்த பங்களாவில் இருட்டு அறையில் தனியே இருந்த குடுமி நாதனும் டில்லிபாபுவும் என்ன நடக்கிறது, பாலு எங்கே போனான் என்றே புரியாமல் குழம்பித் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

குடுமி, ''எனக்கென்னவோ, அவன் இவங்களை உளவு பார்க்கறதுக்குத்தான் வெளில தப்பிப் போயிருக்கான்னு தோணுது'' என்றான்.

''எனக்கும் அப்படித்தான் தோணுது.''

''முதல்ல இங்கேருந்து தப்பிச்சாகணும். அதுக்கு எதனா வழி சொல்லு'' என்றான் குடுமி.

''இனிமே வழிகிழியெல்லாம் பார்த்துட்டிருந்தா முடியாது. எப்படியும் இந்நேரம், அந்தப் புதையல் என்ன, இவங்க யாரு, என்ன செய்யறாங்கன்னு பாலு கண்டுபிடிச்சிருப்பான். அவனுக்கு ஏதாவது ஆபத்து வந்தாலும் வந்திருக்கலாம். நாம கதவை உடைச்சிக்கிட்டு ஓடிட வேண்டியதுதான். முதல்ல பாலுவைப் பார்த்துடணும். அப்புறம் என்ன செய்யறதுன்னு யோசிக்கலாம்'' என்றான் டில்லி.

இருவரும் ஒரு முடிவுடன் எழுந்து, இருளில் நடந்து வந்து அந்த அறையின் கதவருகே நின்று லேசாகத் தொட்டார்கள்.

அந்த அறையின் கதவு தொட்டதுமே திறந்து கொண்டுவிட்டது.

''அதிர்ஷ்டம்டா நமக்கு'' என்றான் டில்லி.

யாரும் வழியில் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டவர்கள், ஒரே பாய்ச்சலில் தடதடவென்று இறங்கி, கண்ணை மூடிக் கொண்டு தலைதெறிக்க ஓட ஆரம்பித்தார்கள்.

''என்னடா செய்யலாம்?''

''ரெண்டே ரெண்டு சாத்தியங்கள்தான் குடுமி. ஒண்ணு, பாலு புதையல் ரகசியத்தைக் கண்டுபிடிச்சிட்டு, பாதுகாப்பா எங்கயாவது பதுங்கியிருக்கலாம். அல்லது, ரகசியம் தெரிஞ்சிக்கிட்டு குண்டர்கள் கிட்ட மாட்டிக்கிட்டிருக்கலாம். முதலாவதுக்கு சாத்தியங்கள் குறைவு. அடுத்ததுக்கே வாய்ப்பு

பா.ராகவன்

10



அதிகம். எப்படியானாலும் அவன் கண்டுபிடிக்காம இருக்க மாட்டான். எனக்கு அவனை நல்லா தெரியும்'' என்றான் டில்லி.

''சரி, வா அவனைக் கண்டு பிடிப்போம்'' என்றான் குடுமி.

''அதுக்கு முன்னால ஒரு நிமிஷம்'' என்ற டில்லிபாபு, தன் நிஜார் பாக்கெட்டின் உள்புறம் கையை விட்டு எதையோ எடுத்தான்.

''என்னடா பண்ற?'' என்று அலுத்துக் கொண்டான் குடுமி.

''ஒரு நிமிஷம் இரு, இதோ வந்துடறேன்'' என்று சட்டென்று பக்கத்தில் இருந்த ஒரு மரத்தடியின் மறைவுக்கு ஓடிய டில்லிபாபு, சரியாக ஒன்றரை நிமிடங்கள் கழித்துத் திரும்பினான்.

''என்னதுடா?'' என்று மீண்டும் கேட்டான் குடுமி.

''ம்? ஒண்ணுமில்லை. நேத்து சாயங்காலத்திலிருந்து எங்க மீனவர் சங்கத் தலைவர் ஒரு பொருளைக் காணாம தேடிட்டிருந்திருப்பார். திரும்பிப் போனதும் அவருக்கு விளக்கம் சொல்லணும்'' என்றவன், ''இப்ப உனக்கு சொன்னா புரியாது. நீ வா, நாம பாலுவைத் தேடுவோம்'' என்று நடக்க ஆரம்பித்தான்.

''இவன் எப்பவுமே இப்படித்தான்'' என்று அலுத்துக் கொண்ட குடுமி அவன் பின்னால் நடக்க ஆரம்பித்தான்.

அவர்கள் கடற்கரை வெளியை அடைவதற்கும் பாலுவை குண்டர்கள் படகில் பார்த்துவிட்டு, கொத்தாக அவன் தலைமுடியைப் பிடித்துக் கொண்டு நிற்பதற்கும் சரியாக இருந்தது!

இருவரும் அதிர்ந்து போனார்கள். ஐயோ, பாலு மாட்டிக் கொண்டுவிட்டான்! இந்தப் புதையல் குண்டர்கள் அவனை என்ன செய்வார்களோ? நிச்சயம் கடலுக்குள் இழுத்துப் போய் தள்ளித்தான் விடுவார்கள். நீச்சல் தெரியாத பாலுவால் ஒரு நிமிடம் கூடத் தண்ணீரில் தாக்குப்பிடிக்க முடியாது!

''ம்ஹூம். யோசிக்கவே நேரமில்லைடா குடுமி. விபரீதம் ஆரம்பிச்சாச்சு. நாம படகில் ஏறிக் கிளம்பியாகணும். எப்படியாவது பாலுவை மீட்கணும்'' என்றான் டில்லி.

அவர்கள் வந்திருந்த கட்டுமரம், அப்போது அவர்கள் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து வெகு தூரத்தில் இருந்தது.

''இதுவும் நல்லதுக்குத்தான். நாம கிளம்பறதை குண்டர்கள்

**யார் அந்தப் பிரபலம்?**



**மேற்கு வங்காளத்தில் அரசு ஏற்படுத்திய ஒரு பயிற்சிப் பள்ளிக்கு இவரே முதல் இயக்குனர்.**



''என்னுடைய பல் ஆடுது.''
''பாட்டு போட்டால் ஆடுமா, போடமலேயே ஆடுமா பாட்டி?''
- ம.சு. ஆதீஷ்

பார்க்க முடியாது. என் பின்னாலேயே ஓடிவா'' என்று உத்தரவிட்டு விட்டு டில்லிபாபு, மரங்களின் பின்னால் வேக வேகமாக ஓட ஆரம்பித்தான். அவனைப் பின்தொடர்ந்து குடுமி நாதனும் தன் குடுமி காற்றில் பறக்க, ஓடத் தொடங்கினான்.

அவர்கள் தம் படகை அடைந்து, மணலில் அதனைத் தேய்த்துத் தள்ளித் திருப்பி கடலுக்குள் வேகமாகத் தள்ளி விட்டுப் பாய்ந்து ஏறிக் கொண்டதும், கட்டுமரம் நீரில் ஒய்யாரமாக மிதக்க ஆரம்பித்தது. முதலில் இருந்த வேகமான ஆட்டம் சற்றே குறைந்து, ஒரு பேலன்ஸ் கிடைத்ததும் டில்லி பாபு வேக வேகமாகத் துடுப்பை வலிக்க ஆரம்பித்தான்.

''சே, தப்புப் பண்ணிட்டோமேடா. பாலுவுக்கு எதனா ஆனா, அவன் வீட்டுக்கு என்ன சொல்றதுன்னு கவலையா இருக்குடா'' என்றான் குடுமி.

''உஷ்! இப்ப வேண்டாத பேச்சுகள் வேண்டாம். நல்லதை நினைத்து, நம்ம கடமையைச் செய்வோம். கஷ்டமான சமயங்கள்ள கலங்காம இருக்கறதுதான் வீரம். எங்க மீனவர் சங்கத் தலைவர் அடிக்கடி சொல்லுவார் இதை'' என்றான் டில்லிபாபு.

ஐந்து நிமிடங்களில் அவர்கள் பாலு போய்க்கொண்டிருந்த படகைப் பார்த்துவிட்டார்கள். 'அதோ, அதோ' என்று குடுமி நாதன் கத்தினான்.

''கவனமா கேள் குடுமி. நான் இப்ப வேகமாக கட்டுமரத்தை செலுத்துவேன். எப்படியும் ஒரு இருபதடி தூரத்தில் அந்தப் படகுக்கு நெருக்கமா கொண்டு போயிடுவேன். கிட்ட போனதும் நீ பாலுவைப் பார்த்து குதிக்கச் சொல்லிக் கத்து. பாலு பயப்படாம தண்ணில குதிச்சிடணும். அவன் குதிச்சதும் நான் துடுப்பை உன்னிடம் குடுத்துட்டுத் தண்ணில குதிப்பேன். எப்படியாவது அவனை இழுத்துட்டு வந்து நம்ம கட்டுமரத்துல சேர்த்துடறது என் பொறுப்பு. அதுவரைக்கும் கட்டுமரம் கவிழாமப் பார்த்துக்க வேண்டியது உன் பொறுப்பு'' என்று உத்தரவுகளைப் பிறப்பித்துவிட்டு, கட்டுமரத்தை எப்படி தள்ள வேண்டும் என்று சில எளிய வழிகளை குடுமிக்கு போதித்தான் டில்லிபாபு.

''இரு புறங்களிலும் சமமான அளவு அழுத்தம் தரவேண்டும். தண்ணீருக்குள் அழுந்தும் துடுப்பை மிகவும் அழுத்தத் தேவையில்லை. ஓரளவு அழுந்தினால் போதும். ஆனால் ஒரு சீரான வேகத்தில் நீரைத் தள்ள வேண்டும். சரியாகத் தள்ளுகிறோமா என்கிற சந்



*''எங்கப்பா தன்னோட வேலையில் நிறைய முத்திரை பதிச்சவர்!''*

*''அப்படி எங்கே வேலை செய்தார்?''*

*''தபால் ஆபீசுலதான்!''*

*- ஜி. சுந்தரராஜன்*

தேகம் இருக்கத்தான் செய்யும். ஆனால் பயப்பட வேண்டாம். கட்டுமரத்தின் திசை மாறினாலும் நிச்சயம் மூழ்காது.''

''குடுமி, இதான்! இதான் சமயம்! நீ குரல் கொடு!'' என்று உத்தரவிட்டான் டில்லி.

''பாலு! நாங்க வந்துட்டோம். நீ குதி. குதிச்சிடு. குதிச்சிடு!'' என்று தொண்டை கிழியக் கத்தத் தொடங்கினான் குடுமிநாதன்.

படகில் இருந்த பாலுவுக்கு நாலைந்து முறை குடுமியின் குரல் மங்கலாகவே கேட்டது. தன் பிரமையாக இருக்கும் என்றுதான் முதலில் நினைத்தான். குண்டர்கள் படகில் அமர்ந்து சீட்டாடத் தொடங்கியிருக்கவே அவன் கடலை நோட்டமிடுவதற்கு எந்தச் சங்கடமும் இருக்கவில்லை. தற்செயலாகத்தான் அவன் குடுமியும் டில்லியும் வந்து கொண்டிருந்த கட்டுமரத்தைப் பார்த்தான். ஒரு கணம் அவனுக்கு எதுவுமே புரியவில்லை. கட்டுமரத்தில் டான்ஸ் ஆடியபடி நின்று கொண்டு 'பாலு! பாலு!' என்று கத்திய குடுமிநாதனைப் பார்த்ததுமே அவனுக்கு வீரம் வந்து விட்டது.

சுற்றுமுற்றும் பார்த்தான். ''என்னடா பாக்கற?'' என்றான் ஒரு குண்டன்.

கடவுளே காப்பாத்து என்று மனதுக்குள் நினைத்தபடி தொபீரென்று நடுக்கடலில் குதித்தான் பாலு.

அதே சமயம் டில்லிபாபு, கட்டுமரத்தின் துடுப்பை பாலுவிடம் கொடுத்துவிட்டு, சட்டையைக் கழட்டிவிட்டுத் தயாராக இருந்தான். பாலு குதித்ததைப் பார்த்ததும் அவனும் கட்டுமரத்திலிருந்து கடலுக்குள் பாய்ந்தான்.

(தொடரும்)

மணலில் சிற்பம் வடிப்பது என்பது உலகம் முழுவதும் பிரபலமான ஒரு கலை. நம் நாட்டில் ஒரிசாவில் ஒரு மணல் சிற்பக் கலைஞர் இருக்கிறார். அவரது மணல் சிற்பங்கள் உலக அளவில்

ரசிக்கும் மனிதர்களாக மாறும் வித்தையை ரசியுங்கள்.

ஒரு சுட்டிப் பையன் விமானத்தில் பயணம் செய்து கொண்டு இருந்தான். மிகவும் போரடிக்கவே, பக்கத்து சீட்டில் அமர்ந்திருந்தவரிடம் பேச்சுக் கொடுத்தான்.


நெட் பிட்ஸ்

# எட்டுக் கால்கள், இரண்டு வால்கள் கொண்ட பிராணி!



பிரபலம்: அவர் உருவாக்கிய பிள்ளையாரின் மணல் சிற்பம் இது.

ஒரு வீட்டின் மேல் பகுதியில் நின்று கொண்டு கிடார் வாசிக்கும் இளைஞனைப் பார்த்து விட்டீர்களா? அப்படியே அவனுக்கு முன்பும் பக்கவாட்டிலும் கவனியுங்கள். முன்புறத்தில் இருக்கும் வீடுகள், தூரமாய் போகப் போக, இசையை



"நாம் இருவரும் ஏதாவது விளையாடலாமா? என்று அவரிடம் கேட்க, அவரும் 'சரி' என்று தலையை ஆட்டினார்.

"கேள்வி - பதில் விளையாட்டு. நான் உங்களை ஒரு கேள்வி கேட்பேன். தெரிந்தால் பதில் சொல்லலாம். பதில் சொல்லாவிட்டால் இருபது ரூபாய் எனக்குத் தரவேண்டும். அதேபோல நீங்கள் கேட்கிற கேள்வி எனக்குப் பதில் சொல்லத் தெரியாது போனால் நான் பணம் தரவேண்டும்" என்றான் பையன்.

பெரியவரும் சம்மதித்தார்.

"ஒரு கண்டிஷன். நீங்கள் நிறையப் படித்தவர்; என்னைவிட பல வயது மூத்தவர். உங்கள் அளவுக்கு எனக்குப் பொது அறிவு இருக்குமா? எனவே, உங்களுக்குப் பதில் தெரியாவிட்டால், நீங்கள் எனக்கு இருபது ரூபாய் தரவேண்டும்.



எனக்குப் பதில் தெரியாத பட்சத்தில், நான் பத்து ரூபாய் தான் கொடுப்பேன்" என்றான்.

"அதுவும் நியாயம்தான்" என்று ஒப்புக் கொண்டார் பெரியவர்.

பெரியவர் முதல் கேள்வி கேட்டார். பையன் பதில் சொன்னான். அடுத்து, பையனின் கேள்விக்குப் பெரியவரும் பதில் சொன்னார். இதே போல சில தடவை தொடர்ந்தது.

பையன், "யானையைப் போன்ற உருவம், எட்டுக் கால்கள், இரண்டு வால்கள், மனித முகம் அது என்ன?" என்று கேட்டதும், பெரியவர் திணறிவிட்டார். அவருக்குப் பதில் தெரியவில்லை.

பந்தய விதிப்படி இருபது ரூபாயை எடுத்து பையனிடம் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டான் பையன். அதிலிருந்து பத்து ரூபாயை எடுத்து, அவரிடமே கொடுத்து விட்டுச் சொன்னான், "சாரி! எனக்கும் பதில் தெரியாது!"

அடுத்து பார்த்து ரசிக்க ஒருபடம்!

தொங்கும் டிராயரின் உள்ளேயிருந்து வெளியில் எட்டிப் பார்க்கும் பூனை + நாய்களை ரசியுங்கள்.

அஸ்ஸாம் மாநிலத்தில் ஒரு சிறு கிராமத்தைச் சேர்ந்தவர் 83 வயது பாதுராம் மகந்தா. அவர் அண்மையில் இறந்து பேனார். அவரது சவத்துக்கு எரியூட்ட ஒரு விளக்கிலிருந்து தீ

பெறப்பட்டது. அந்த விளக்கிற்கு ஒரு சிறப்பு உண்டு. 1947ல் இந்தியா சுதந்திரம் அடைந்த நாளில், தனது குடிசையில் ஒரு விளக்கை ஏற்றி வைத்தார். நாடெங்கும் மகாத்மா காந்தியின் தலைமையில் சுதந்திரத் தீ கொழுந்து விட்டு எரிந்தது. அதன் பலனாக நம் நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது. இத்துடன் சுதந்திரத் தீ அணைந்து விடக் கூடாது. அது தொடர்ந்து தீபமாய் ஒளிர்ந்து கொண்டே இருக்க வேண்டும் என்று முடிவு செய்தார் மகந்தா. அந்தத் தீபத்தை அணையாமல் பாதுகாத்து வந்தார். அவர் மரணத்தையடுத்து, அவரது சிதைக்குத் தீ மூட்ட அந்த விளக்கிலிருந்து பெற்ற நெருப்புதான் பயன்படுத்தப்பட்டது.

மகந்தாவின் மகன், தன் தந்தையின் மரபைக் காப்பாற்றித் தொடரும் விதமாய், அந்த விளக்கைத் தொடர்ந்து ஒளிரச் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறார்.

ஜனவரி முதல் தேதியன்று, அந்தமான் தீவுகளில் அமைக்கப்பட்ட



சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான முகாம் ஒன்றில் ஒரு பெண்மணி பெற்றெடுத்த குழந்தை இது. அமைதியாய் உறங்கிக் கொண்டிருக்கும் இந்தக் குழந்தைக்கு அதன் தாய் சூட்டியுள்ள பெயர் சுனாமி!

**- எஸ். சந்திரமௌலி**

*"ரமேஷ், எட்டு தடவையா பரீட்சை எழுதி, ஒரு வழியா பாஸ் பண்ணிட்டியாமே! நம்பவே முடியலடா."*

*"என்னாலேயே நம்ப முடியலடா!"*

*- அனுராதா ராஜப்பா*





# 1000/-

கீழே 5 கேள்விகளும் 6 படங்கள் மற்றும் பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து எழுத வேண்டும். பெற்றோர் கையொப்பம் அவசியம். முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள். மொத் தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந் தெடுக்கப்படுவர். ஒவ் வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியா னது.

கடைசித் தேதி : 20.02.2005

## I. பதில் என்ன?

1. நம் உடலில் மிகச் சிறிய எலும்பு எது?
2. மிகப் பெரிய எலும்பு எது?
3. எலும்பு வளையுமா?
4. மனித உடலில் எத்தனை எலும்புகள் உள்ளன?
5. மிக அதிகமான எலும்புகள் எந்த இரண்டு பகுதிகளில் உள்ளன?

# ரூபாய் பரிசுப் போட்டி

**II. பறவைகளின் பெயர்களைச் சரியாக எழுதுங்கள்.**




















ஹம்மிங் பேர்ட், மீன்கொத்தி, மலை மொங்கன், பஞ்சுவிட்டான், கரண்டிவாயன், பாம்புத்தாரா

ஆசிரியர்,
கோகுலம்
கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

# ஓவியப் போட்டி

இயற்கை எழில் கொஞ்சும் இடங்களைப் பார்த்தால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது!



இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: **அருவிகள்.** உங்கள் கற்பனைக்கேற்றவாறு அருவியை வண்ணத்தில் வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி : 6.02.2005

## கோகுலம் சுழல் கோப்பை

ஓர் ஆண்டில் கோகுலம் இதழ்களில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அந்தப் பள்ளிக்கு சுழல் கோப்பை வழங்கப்பட்டு



வருகிறது. இப்பொழுதே முயற்சி செய்தால் உங்கள் பள்ளியும் சுழல் கோப்பையைப் பெற முடியும். உடனே நீங்களும் உங்கள் நண்பர்களும் படைப்புகளை அனுப்பி வையுங்கள்.

கோப்பையை வெல்லுங்கள்!

# தங்க

ஓர் ஏழைக் குடும்பத்தினர் தினமும் போதிசத்துவரை பிரார்த்தனை செய்வர். "புத்த பகவானே! எங்கள் தரித்திரத்தைத் தீர்த்து வையுங்கள்" என வாய்விட்டு வேண்டுவர்.

புத்தர் அவர்களுக்கிறங்கி ஒரு தங்க வாத்தாக வந்தார். அந்த வாத்தின் இறகுகளெல்லாம் தங்க மயமாக இருந்தன.

பொழுது புலருமுன் இவர்கள் வீட்டு முற்றத்தில் ஒரு தங்க இறகை உதிர்த்தது வாத்து. அதைக் கண்டு மகிழ்ந்தவர்கள் அதை விற்று குடும்பத்தை நடத்தினர். அந்தப் பொருள் தீரும் சமயம் மற்றொரு இறகை உதிர்த்தது தங்க வாத்து.

எங்கிருந்து வருகிறது, எங்கே போகிறதென்று யாருக்கும் தெரியவில்லை. ஒரு நாள் அந்தக் குடும்பத்தின் தலைவன் குடும்பத்தினரிடம் "அந்த வாத்து வராமலே போய்விட்டால் நம் கதி என்னவாகும் என்று யோசித்தீர்களா? அடுத்த முறை அது வரும்போது நாம் சூழ்ந்து நின்று அதைப் பிடித்துவிட வேண்டும். அதன் இறகுகளை மொத்தமாகப் பிய்த்து விற்றால் நிறையப் பணம் கிடைக்கும். அதை முதலீடாக வைத்து வியாபாரம் செய்து பெரும் பணக்காரனாகலாம். நம் கையிருப்புத் தீர்ந்து விட்டதால் அனேகமாக நாளை அதுவரக் கூடும். விடியற்காலையில் நாம் தூங்காமல் விழித்திருந்து வலை போட்டுப்

மாலதி

# வாத்து!




பிடிக்க வேண்டும்'' என்றான்.

குடும்பத்தினர் சந்தோஷமாய் ஒப்புக் கொண்டு வீட்டுக் கூரை மேல் மெல்லிய திரையை விரித் தனர். அவர்கள் எண்ணப்படி மறுநாள் வந்த வாத்து வலையில் அகப்பட்டுக் கொண்டது. ஆனால் குடும்பத்தினர் கைபட்டதுமே வாத்தின் இறகுகள் வெண்மை யாகி விட்டன.

அவர்கள் தங்கள் பேராசையை எண்ணி வெட்கப்பட்டு பற வையை சுதந்திரமாகவிட அது பறந்தே போயிற்று. அதன் பிறகு அது திரும்பி வரவேயில்லை.





ஓபரா ஹவுஸ்



## ஜல்லிக்கட்டு!

எங்கள் தெருவில் மாடுகள் அதிகமாக அலையும். தீபாவளிக்கு எங்கள் வீட்டுக்கு விருந்துக்கு வந்த பெரியப் பாவை ஒரு மாடு முட்ட வந் தது. அவர் கொம்பைப் பிடித்து



தைரியமாக அடக்கிவிட்டார். எல்லோரும் பயம் கலந்த மகிழ்ச்சியில் இருந்தோம். அப்போது தம்பி, ''அலங்கா நல்லூர்ல 'தை'யிலதான் ஜல்லிக்கட்டு நடக்கும். பெரியப்பாவால நம்ம ஊர்ல ஐப்பசியிலேயே நடந்துருச்சி'' என்று சொல்ல பெரியப்பா உட்பட அனைவரும் சிரித்து விட்டோம்.

**- அ. பேச்சியப்பன்,**
**ராஜபாளையம்**

## காலத்திற்கேற்ற மாற்றம்

சமீபத்தில் என் தங்கை மினுவிடம் விலங்கு, பறவை களின் பண்புகளைக் கூறிக் கொண்டிருந்தேன். அப்போது காக்கைகளின் பகிர்ந்துண்ணும் பண்பைப் பற்றிச் சொன்னேன். அவள் அதை நேரடியாகப் பார்க்க வேண்டுமென்று விரும்பினாள். உடனே அவளை எங்கள் வீட்டின் பின்புறமுள்ள தோட்டத்திற்கு அழைத்துச் சென்று, எங்கள் அம்மா சுட்ட தோசை ஒன்றை மரத்தடியில் வைத்துவிட்டு, மறைந்தி ருந்து கவனித்தோம். அப்போது ஒரு காகம் வந்து தோசையைப் பார்த்தது. உடனே கரைந்து, நிறைய காக்கை களை அழைக்கும் என்று நினைத்துக் கொண்டிருந்த எங்களுக்கு ஏமாற்றமே ஏற் பட்டது. ஆம்! அது எந்தக் காக்கையையும் அழைக்காமல், தனியே முழு தோசையையும் சாப்பிட்டு விட்டுப் பறந்து சென்றது!

**- எம்.வினோத்,**
**சங்கரன்கோவில்**

## குழந்தையும் தெய்வமும்

எங்கள் வீட்டிற்கு கீழ் சந்தில்தான் அனைவரும் டூ வீலர் நிறுத்துவோம். அன்று அங்கே ஓர் அழகிய துப்பாக்கி கிடந்தது. நான் அதை ஆசை யாக எடுத்துக் கொண்டேன். என் அம்மாவோ அதை உரிய வரிடம் ஒப்படைத்து விடு என்றார்கள். நான் எங்கள்



பக்கத்தில் உள்ள போர்ஷன்காரர்களிடம் விசாரித்தும் யாரும் எங்களுடையது அல்ல என்று சொல்லிவிட்டார்கள். அப்பொழுது எங்கள் பக்கத்து வீட்டு லிங்கேஷ் என் கையிலிருந்த மியூசிக் கன்னை ஆசையாகக் கேட்டான். முன்பு ஒரு முறை என் அம்மா சொன்னது எனக்கு ஞாபகம் வந்தது 'கண்டெடுத்த பொருட்களை உரியவரிடம் கொடுக்க வேண்டும். இல்லையேல் கடவுளுக்கு காணிக்கையாக்க வேண்டும்'. எனக்கு சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. துப்பாக்கியை லிங்கேஸிடம் கொடுத்து விட்டேன். குழந்தையும் தெய்வமும் ஒன்றுதானே!

**- டேனியல் லியோ பிரபு,**
**மதுரை**

# குக்கருக்குச் சாப்பாடு!


ஒரு நாள் காலையில் சமையல் செய்து கொண்டிருந்தார் அம்மா. அப்பொழுது பள்ளிக்கு கிளம்பிக் கொண்டிருந்த என் தங்கை குளிப்பாட்டிவிட அழைத்த பொழுது, குக்கர் விசில் சத்தம் தொடர்ந்து அடித்துக் கொண்டேயிருந்தது. உடனே என் தங்கை குக்கரைப் பார்த்து ''ஏய், உனக்குத்தான் உள்ளே சாப்பாடு எல்லாம் வைத்திருக்கிறதே, பின் ஏன் சத்தம் போடுகிறாய்?'' என அதட்டியதைக் கேட்டவுடன், அந்த பரபரப்பிலும் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.


**- அபர்ணா,**
**நாகர்கோவில்**




அம்மாவைத் தேடி...
கதை: வாண்டுமாமா
படம்: மகேஸ்
4
நாய்களைத் துரத்தியபடி இரு பணியாளர்கள் ஓட, மக்கள் ஸ்தம்பிக்க, அகிலாவுக்கு தப்ப வாய்ப்புக் கிடைத்தது.
லட்டு, ரொம்ப தாங்க்ஸ். உன்னை அப்புறமா மீட்டுக்கறேன்.
அடக்கடவுளே! அந்த நாய் அகிலாவோட துல்ல!
உளறாதே! அந்தப் பொண்ணு இங்கே வர சான்ஸே இல்லை.
அதே சமயம் அகிலா -
ப்ளீஸ்! நடிகை வசந்தாவோட ரூம் நம்பர் என்ன?
அவங்க அடுத்த தளத்திலே கிரீன் ஸூட்டிலே இருக்காங்க.
அகிலா கிரீன் ஸூட்டை நெருங்கியபோது -
லக்கேஜ்கள்!... என்ன ஆச்சு?


அகிலா அதிர்ச்சியடைந்தாள்.
ஹோட்டலின் காரிடாரில் அகிலா கைகளில் முகம் புதைத்தபடி -
ஐயோ... அம்மாவைக் காணோமே?
அகிலாவின் விம்மல்களுக்கிடையே ஒரு கனிவான குரல்...
குட்டிப் பொண்ணே! ஏம்மா அழறே?
பிரபல நடிகை வசந்தாவைப் பார்க்கணும், பேசணும்னு வந்தேன் சார். ஆனா... ஆனா...
இந்த ரூமுக்குள்ளே போம்மா.
ஓ...?
மிஸ்... வசந்தா... தே...வி!


அகிலா தன் அம்மாவை ஆர்வமாகப் பார்த்தாள்.
சில நிமிடங்கள் ஒருவரை ஒருவர் பார்த்தபடி மௌனமாக இருந்தனர்.
பிறகு -
அம்மா... அம்மா! என்னைக் காப்பாத்து! நான் உன் மகள்!
வசந்தா! என்ன ஆச்சு? இந்தப் பெண் யாரு?
ஓ, ராஜேஷ்! உன் மனைவி சொல்லுவா.
இந்தப் பெண்ணின் முகத்தைப் பார்! என் முகத்தையும் பார். இன்னுமா புரியவில்லை!


அந்த ஆளு உங்க மகளைக் கண்டுபிடிச்சுட்டதாச் சொன்னானே!
கொஞ்சம் பொறு மாலினி.
அகிலா, அழாத கேளு. நீ ஒரு வயசுப் பாப்பாவா இருக்கும்போது...
...வசந்தா கடந்த காலக் கதையைக் கூறினாள்.
வசந்தா! யாரோ தண்டபாணியாம். உன்னோட பேசணுமாம்.
அகிலா தண்டபாணியைப் பற்றிக் கூறினாள்.
நீங்கள் தேடிக் கொண்டிருக்கும் உங்கள் மகளை இன்று இங்கு கூட்டி வருகிறேன்...
அப்படியா...? நாங்களும் உங்களுக்கு ஒரு செய்தி வைத்திருக்கோம் தண்டபாணி!
(தொடரும்)

ஒட்டகங்கள் 400 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே பூமியில் வசிக்க ஆரம்பித்து விட்டன. அப்போது ஒட்டகங்கள் இவ்வளவு உயரமாக இருக்கவில்லை; முயலை விடச் சற்றுப் பெரிதாக இருந்தன. திமிலும் இருக்கவில்லை. காலப் போக்கில் பரிணாம வளர்ச்சியில் படிப்படியாக இன்றுள்ள ஒட்டகங்கள் போன்ற உருவத்துக்கு மாறின.

ஆரம்பத்தில் வட அமெரிக்காவில் வசித்த ஒட்டகங்கள் தென் அமெரிக்கா, ஆசியா என மற்ற நாடுகளுக்கும் பரவின. 1,25,000 ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் ஒட்டகத்தை அடிமைப்படுத்தி விட்டான்.

சுமை தூக்க, பிரயாணம் செய்ய என பல வேலைகளுக்கு இந்த ஒட்டகங்களைப் பயன்படுத்தி வருகிறான். அப்படியும் கூட ஒட்டகங்களைக் கையாள்வது என்பது அவ்வளவு சுலபமான விஷயமாக இல்லை. ஒட்டகம் தனக்கு விருப்பம் இல்லாத நேரத்தில் ஏதாவது சுமைகளை ஏற்றினால் முரண்டு பிடிக்கும், எதிர்ப்பைக் காட்டும்.

ஒட்டகங்களுக்கு விதவிதமான உணவுகளைச் சாப்பிடக் கூடிய வாய்ப்பு கிடையாது. இவை வசிக்கக் கூடிய இடங்கள் பொதுவாக வறண்டு காணப்படுகின்றன. எனவே வறண்ட, பாலைவனப் பகுதிகளில் என்ன தாவரங்கள் வளர்கின்றனவோ, அதை உண்டு வாழ்க்கை நடத்துகின்றன. இவற்றிற்கும் மூன்று இரைப்





# பாலைவனக் கப்பல்!

பைகள் உள்ளன. உணவை விழுங்கிவிட்டு, மீண்டும் அதை எடுத்து நன்றாக மென்று ஜீரணம் செய்து கொள்கின்றன.

பாலைவனத் தாவரங்களில் 50% தண்ணீர் இருக்கிறது. இதிலிருந்தும் ஒட்டகம் தண்ணீரைச் சேமித்து வைத்துக் கொள்கிறது. ஒட்டகத்தால் 90 நாட்களுக்குக் கூட தண்ணீர் பருகாமல் இருக்க முடியும். ஆனால் தண்ணீரைக் கண்டவுடன் ஒரே நேரத்தில் 35 முதல் 40 காலன் தண்ணீரைப் பருகி விடும்.



எஸ்.சுஜாதா

ஒட்டகத்தின் அழகே அதன் திமில்தான். இந்தத் திமிலில் கொழுப்பு சேமித்து வைக்கப்படுகிறது. உணவு பற்றாக்குறை ஏற்படும் போது இந்தத் திமிலில் இருந்து தனக்குத் தேவையான சக்தியைப் பெற்றுக் கொள்கிறது ஒட்டகம். இந்தத் திமிலிலிருந்து கொழுப்பு குறையக் குறைய திமிலும் சிறிதாகிக் கொண்டே வரும். எப்பொழுது உணவும் நீரும் உட்கொள்கிறதோ, அப்போது மீண்டும் திமில் பழைய நிலைக்குத் திரும்பிவிடும்.



ஒட்டகத்துக்கு சூழ் நிலைக்கு ஏற்ப உடல் வெப்ப நிலையை அதிகரிக்கவோ, குறைத்துக் கொள்ளவோ முடியும். இதனால் வியர்வை வெளியேறாமல் உள்ளேயே சேமித்து வைக்கப்படுகிறது.

பாலைவனத்தில் புயற் காற்று வீசும் போது ஒட்ட கத்தின் மூக்கில் சவ்வால் ஆன உருண்டை ஒன்று மணல் உள்ளே செல்லாமல் காக்கிறது.

முதிர்ந்த ஒட்டகம் 7 முதல் 11 அடி வரை இருக்கும். தாய் ஒட்டகம் 400 முதல் 425 நாட் கள் வரை குட்டியைச் சுமந்து, பிறகு பிரசவிக்கும். ஒரு முறைக்கு ஒரே ஒரு குட்டிதான் பிறக்கும். இரண்டு ஆண்டு இடைவெளியில் தாய் அடுத்த குட்டியைச் சுமக்க ஆரம்பிக் கும்.

ஒட்டகத்தின் ஆயுட்காலம் 10 முதல் 15 வருடங்கள்தான்!

ஒரு நாளில் பாதி நேரம் உணவு தேடவும் மீதிப் பாதி நேரம் உடல் வெப்பத்தைச் சமாளிக்கவும் செலவிடு கின்றன ஒட்டகங்கள்.

பாலைவனப் பகுதியில் வாழும் மக்களுக்கு ஒட்டகங் கள்தான் சிறந்த போக்குவரத்து சாதனம். எனவே இதைப் பாலைவனக் கப்பல் என்று அழைக்கின்றனர்.

ஒட்டகங்களில் பல வகை கள் உண்டு. சிலவற்றிற்கு இரண்டு திமில்களும் சில வற்றிற்கு ஒரே ஒரு திமில் மட்டும் இருப்பதுண்டு.

# தவளை

சத்தம் தொடர்ந்து போட்டிடுமே!
நித்தம் வெளியில் காட்டிடுமே!




தத்தித் தத்திச் சென்றிடுமே!
தண்ணீர் என்றால் ஒன்றிடுமே!

பாம்பைக் கண்டால் நடுங்கிடுமே!
பாய்ந்தே ஓடி ஒடுங்கிடுமே!
வீம்பாய்க் கத்திக் கெட்டிடுமே!
விரோதி கண்ணில் பட்டிடுமே!

நதியில் நீச்சல் அடித்திடுமே!
நாக்கால் பூச்சி பிடித்திடுமே!
அதிகம் பேசி ஆடிடுமே!
அழிவை அதுவே தேடிடுமே!

- அணக்குடி சு. சம்பத்

# நாய்க் குட்டியை அடைய உதவுங்கள்



# இமையில் தங்கிய நிமி!

மிகப் பழங்காலத்தில் நம் நாட்டில் இட்சுவாகு வம்சத்தைச் சேர்ந்த இளவரசன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் 'நிமி'.

உரிய பருவம் வந்ததும் அவன் அரசன் ஆனான். அதை ஒட்டி, அவன் ஒரு பெரிய யாகம் செய்ய விரும்பினான்.

அந்த யாகத்துக்கு 'ஸத்ர யாகம்' என்று பெயர். இடைவிடாமல், தொடர்ந்து ஆயிரம் ஆண்டுகள் செய்யப்பட வேண்டிய யாகம் அது.

அதற்கு குருவாக வசிஷ்ட முனிவரை அவன் தேர்வு செய்தான்.

அவரிடம் ''நீங்கள்தான் தலைமைக் குருவாக இருந்து நடத்தித் தர வேண்டும்'' என்று வேண்டினான்.

மகிழ்ச்சி அடைந்த வசிஷ்டர், ''எனக்கு ஆட்சேபணை ஏதும் இல்லை... ஆனால்...'' என்று தயக்கத்துடன், ''ஏற்கெனவே இந்திரன் என்னை அழைத்திருக்கிறான். அவனும் ஒரு யாகம் செய்கிறானாம். நானும் ஒப்புக் கொண்டு விட்டேன். இனிக் கொடுத்த வாக்கை மீற முடியாது... எனவே...'' என்றவர், ''இருந்தாலும், உனக்கு என்னால் உதவ முடியும்...'' என்றார்.

''அது எப்படி....?'' என்றான் நிமி.

வசிஷ்டர், ''நீ செய்யப் போவதோ ஆயிரம் ஆண்டு யாகம். ஆனால் இந்திரனுடையது ஐந்நூறு ஆண்டுகள்தான். அதைத் தொடங்கி முடித்து விட்டு வந்து உன்னுடையதை நடத்தித் தருகிறேன்...'' என்றார் உறுதியுடன்.

வசிஷ்டரின் இந்த உறுதி மொழியை நிமி காதில் வாங்கிக் கொண்டானே தவிர, அவன்



மனம் வேறு ஏதோ மாற்று ஏற்பாடுகள் பற்றிய சிந்தனையில் இருந்தது. ஆகவே, அவன் பதில் ஏதும் கூறவில்லை.


அவனுடைய இந்த மௌனத்தை, வசிஷ்டர் 'பரம சம்மதம்' என்று எடுத்துக் கொண்டுவிட்டார். ஆகவே, ''சரி... நான் கிளம்புகிறேன்...'' என்று விடை பெற்றுச் சென்று இந்திர லோகத்தில் இந்திரனுடைய யாகத்தைத் தொடங்கி நடத்தலானார்.

வசிஷ்டர் சென்ற பிறகு, நிமி ஒரு முடிவுக்கு வந்து விட்டான்.

வசிஷ்டருக்குப் பதிலாக கௌதமர் என்ற முனிவரைக் கொண்டு, தனது யாகத்தைத் தொடங்கிவிட முடிவு செய்தான்.

நேராகக் கிளம்பிக் கௌதமரிடம் சென்றான். ''முனிவர் அவர்களே...! நான் செய்ய உத்தேசித்துள்ள ஸத்ர யாகத்துக்குத் தாங்கள் தான் வந்து தலைமை ஏற்றுத் துவக்கி நடத்தி வைக்க வேண்டும்...'' என்று கேட்டுக் கொண்டான்.

அவரும் அதற்கு ஒப்புக் கொண்டு, உரிய நல்ல நேரம் முதலியவற்றைப் பார்த்துச் சொல்லி



அதன்படியே யாகத்தைத் துவக்கி வைத்தார். அதில் ஏராளமான ரிஷிகளும் முனிவர்களும் வந்து பங்கு கொண்டனர். யாகம் தொடர்ந்து நடைபெற்றது.

ஐந்நூறு ஆண்டுகள் உருண்டு ஓடிவிட்டன.

இதற்கு இடையே, இந்திர லோகம் சென்றிருந்த வசிஷ்டர், அங்கு, தான் தொடங்கிய யாகத்தை நிறைவு செய்து விட்டு, ஏற்கெனவே தான் உறுதி கூறியிருந்தவாறு, நிமியின் ஸத்ர யாகத்தைத் தொடங்குவதற்காகப் பூலோகத்துக்கு விரைந்து திரும்பி வந்தார்.

நிமியின் நாட்டுக்குச் சென்றபோது, அங்கு வேறு யாருடைய தலைமையிலேயோ, அந்த ஸத்ரயாகம் நடந்து கொண்டிருப்பதைக் கண்டார்.

'நம்மை 'வா... வா...' என்று வருந்தி அழைத்தான்; 'சரி' என்று ஒப்புக் கொண்டு, நிலைமையை விளக்கிவிட்டு, இந்திர லோகத்திலிருந்து திரும்பி வந்து நிச்சயம் தொடங்குவதாக உறுதி கூறியபோது, தனது மௌனத்தின் மூலம் அதற்கு ஒப்புதல் தந்தான்; அதன்படி நமக்காகக் காத்திராமல், இப்படி வேறு யாரோ ஒருவரைக் கொண்டு யாகத்தைத் தொடங்கிவிட்டானே! நம்மை அவமானப்படுத்தும் செயல் அல்லவா இது...?' என்று வசிஷ்டர் பொங்கி எழுந்தார்.

"உன்னுடைய இந்த ஆணவப் போக்குக்கு, நீ தகுந்த தண்டனையை அடைந்தே தீர வேண்டும்... பிடி சாபம்...! நீ உடல் அற்றவன் ஆகக் கடவது..." என்று சபித்து விட்டுப் போய்விட்டார், வசிஷ்டர்.

அடுத்தக் கணமே, நிமியின் ஆன்மா அவனது உடலை உதறிவிட்டு, வெளியேறி விட்டது. கீழே படுத்த அவனது உடலை, அங்கு இருந்தவர்கள், எடுத்துத் தைலக் காப்பிட்டுப் பாதுகாக்கலாயினர்.

அவனால் துவக்கப்பட்ட ஸத்ரயாகம், தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. நிமியும் உடல் அற்றவனாகவே அலைந்து திரிந்து, அந்த யாகத்தைக் கண்காணித்தான்.

மீண்டும் ஆண்டுகள் உருண்டு ஓடத் தொடங்கின. ஆயிரம் ஆண்டுகள் முடிந்ததும் எந்த ஒரு குறையும் இன்றி யாகம் நிறைவேறியது.

**யார் அந்தப் பிரபலம்?**



**8,848 மீட்டர் உயரத்தை முதலில் எட்டியவர்.**


யாகத்தில் கலந்து கொண்ட ரிஷி-முனிவர்கள் யாகத்தின் பயனாக, ஆவி உருவில் இருந்த நிமிக்கு, முன் போல் அவனது பழைய உடலைப் பெற்றுத்தர விரும்பினர். அவ்வாறே, தேவர்களிடம் பிரார்த்தித்தனர். தேவர்களும் அவ்வாறே செய்து தரச் சித்தமாக இருந்தனர்.

ஆனால், உடல் அற்று இருந்த நிமியின் எண்ணம் வேறு மாதிரியாக இருந்தது. எனவே, அவன் தேவர்களிடம் வேறு ஒரு வேண்டுகோளை வைத்தான்.

''பிரபோ! உடல் இன்றி அலையும் எனக்கு ஓர் உடல் தேவைதான். அதைப் பெறத்தான் நானும் விரும்புகிறேன். ஆனால், தைலக் காப்பில் உள்ள, அதே பழைய என் உடலை அல்ல... அதற்குப் பதில், வேறுவிதமான புதிய உடலையே அதாவது வசிப்பிடத்தையே நான் பெற விரும்புகிறேன்...'' என்றான்.

''அப்படியா?'' என்ற தேவர்கள், ''கேள்... உன் விருப்பம் என்ன? சொல் அதன்படியே தருகிறோம்!'' என்றனர்.

''எல்லோர் கண்களிலும் இருந்து கொண்டு, நான் இயங்க வேண்டும். அவர்களின் கண்களுக்குப் பாதுகாப்பு அரணாக நான் விளங்க வேண்டும் என்பது என் விருப்பம். அதை நிறைவேற்றித் தாருங்கள் அது போதும்...'' என்று வேண்டினான்.



*''டாக்டர், ரெண்டு நாளா பல் வலி.''*

*''எங்கே ஈ காட்டு?''*

*''கேபிடல் ஈயா? ஸ்மால் ஈயா?''*

*- அரிச்சந்திரன்*

---

''அவ்வாறே ஆகுக'' என்று கூறிவிட்டுத் தேவர்கள் மறைந்து விட்டனர்.

அந்தக் கணம் முதல், வரத்துக்கு ஏற்ப, நிமி மனிதர்களின் இமைகளில் வந்து தங்கி, அவற்றை இயக்கலானான்.

அதுவரையில் தேவர்களைப் போன்று, கண் இமைக்காமல் இருந்த மனிதர்கள், தமது கண்களை இமைக்கத் தொடங்கினர்.

நிமி வந்து தங்கியதால், மனிதர்களின் இமைக்கு 'நிமி' என்றே பெயர் ஏற்பட்டுவிட்டது.

அந்த நிமி - அதாவது இமைகள் இயங்கும் கால அளவை ஒட்டியே 'நிமிடம்' என்ற நேரக் கணக்கீடு ஏற்பட்டது.



# ஒரே கூட்டில் ஆயிரம் முட்டைகள்!

I. 1. மண்ணிலே பிறந்தவள், மங்கையரைக் கவர்ந்தவள் - அவள் யார்?

2. ஒரே நிமிடத்தில் உறைந்து போவோம்! உறைந்ததைக் கண்டு வியந்து போவோம்! - அது என்ன?

3. மண்ணுக்குள் இருக்கும் பொன்னம்மாள்! பெண்கள் கன்னத்தில் மின்னுவாள்! - அவள் யார்?

**- என்.உமாராணி, அறந்தாங்கி**

II. 1. தூண்டா மணி விளக்கு ஊருக்கெல்லாம் ஒரு விளக்கு - அது என்ன?

2. வளைந்து, வளைந்து நடக்கிறான், சீண்டினால் கடிக்கிறான் - அது என்ன?

3. ஒரே கூட்டில் ஆயிரம் முட்டைகள் - அது என்ன?

**- வீ.கலாதேவி, அ.ம.மே.நி.பள்ளி, இடைப்பாடி**

III. 1. தட்டைத் தின்னும், தாள் தின்னும் என் செவலைக் காளை. தண்ணீர் பட்டால் இறந்து விடும் என் செவலைக் காளை - அது என்ன?

2. கால் உண்டு நடக்க மாட்டேன்; முதுகு உண்டு வளைய மாட்டேன்; கை உண்டு உண்ண மாட்டேன் - நான் யார்?

3. குண்டோதரன் வாயில் குள்ளன் நுழைந்தால் குபேரப் பட்டணத்திற்கு வழி தெரியும் - அது என்ன?

**- சி. அற்புத ராஜ், திண்டுக்கல்**

IV. 1. காஞ்சிபுரம் கறுப்பு, செங்கல்பட்டு சிகப்பு கடித்து பார்த்தால் கசப்பு - அது என்ன?

2. குள்ளப் பெண்ணுக்கு குருணி நகை- அது என்ன?

3. இரு ஏழு பதினாலு சாலை; இரு பக்க தச்சனுடைய வேலை; அதில் ஜெயிப்பவருக்குப் புஷ்பராகமலை - அது என்ன?

**- பாலாஜி, ஏழாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, வந்தவாசி**

**விடைகள்:** I. 1.தங்கம் 2.புகைப் படம் 3.மஞ்சள் II. 1.நிலா 2.பாம்பு 3.சோளக்கதிர் III. 1.நெருப்பு 2.நாற்காலி 3.பூட்டு, சாவி IV. 1.குண்டுமணி 2.மிளகாய்ச் செடி 3.பல்லாங்குழி

## விடுகதைப் பக்கம்




# பத்துக்குள்ளே எண் ஒன்று சொல்!

I. என் தம்பி கணக்கில் படுசுட்டி. ஒரு நாள் 45 என்ற எண்ணை நான்கு எண்களாகப் பிரித்துக் காட்டினான். அந்த நான்கு எண்களின் கூட்டுத் தொகை 45ஆக இருந்தது. இதில் ஆச்சர்யம் என்னவென்றால் அந்த நான்கு எண்களில் முதல் எண்ணோடு இரண்டைக் கூட்டினான், இரண்டாம் எண்ணுடன் இரண்டைக் கழித்தான், மூன்றாம் எண்ணை இரண்டால் பெருக்கினான், நான்காம் எண்ணை இரண்டால் வகுத்தான். ஆனால் நான்கு எண்களையும் கூட்டி, கழித்து, பெருக்கி, வகுத்து வந்த விடை ஒன்றுதான். அப்படியென்றால் அந்த எண்கள் எவை?

**- ஏ.ஜி.முகம்மது தௌபீக்,**
**மேலப்பாளையம்**

II. இந்த எண்ணை ஒன்பதால் வகுத்தால் மீதி எட்டும், எட்டால் வகுத்தால் ஏழும், ஏழால் வகுத்தால் ஆறும், ஆறால் வகுத்தால் ஐந்தும், ஐந்தால் வகுத்தால் மூன்றும், மூன்றால் வகுத்தால் இரண்டும், இரண்டால் வகுத்தால் மீதி ஒன்றும் வரும். அந்த எண் எது?

**- ம. கிருஷ்ண குமார்,**
**ஆறாம் வகுப்பு,**
**ஸ்ரீ வாகீஸ்வரி வித்யா மந்திர்,**
**பில்சின்னாம்பாளையம்,**
**பொள்ளாச்சி**

III. ஒரு வியாபாரி 100 பொம்மைகள் வைத்திருக்கிறான். அவற்றில் சில யானைகள், சில குதிரைகள், மீதி நாய்கள். ஒரு யானையின் விலை ரூ. 5¼, குதிரையின் விலை ரூ. 2¼, ஒரு நாயின் விலை 25.பை. பொம்மைகளின் மொத்த விலை ரூ.100. ஒவ்வொரு வகையிலும் எத்தனை பொம்மைகள் அவ்வியாபாரியிடம் இருக்கின்றன?

**- ச. அழகுவேல்,**
**திண்டுக்கல்**

IV. கீதா, ராதா, சுதா, அனிதா என்ற நான்கு பேரும், ஒரு நாள் வட்டமான ஒரு மைதானத்தைச் சுற்றி நடக்கும் போட்டியொன்று ஏற்படுத்தினார்கள். அந்த



மைதானத்தின் சுற்றளவு ஒரு மைல். கீதா நடக்கும் வேகம் மணிக்கு 5 மைல். ராதா நடக்கும் வேகம் மணிக்கு 4 மைல். சுதா நடக்கும் வேகம் மணிக்கு 3 மைல். அனிதா நடக்கும் வேகம் மணிக்கு 2 மைல். மாலை 4 மணிக்கு ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து நால்வரும் புறப்படுகின்றனர். நடந்து கொண்டேயிருக்கிறார்கள். மீண்டும் அந்த இடத்துக்கு அவர்கள் எப்போது ஒன்றாக வந்து சேர்வார்கள்?

**- ஆர். பிரசன்னா,**
**கரூர்**

V. 1. முதுகெலும்பற்ற வளைதசை புழுவினத்தைச் சார்ந்த உயிரி எது?

2. 'லாம்பிடோ மாருதி' எனும் அறிவியல் பெயர் கொண்ட அன்னலிடா வகுப்பைச் சேர்ந்த உயிரி எது?

3. இருபால் உயிரி எது?

4. தன் உடல் எடைக்குச் சமமான கழிவுகளையும், மண்ணையும் உண்டு உயிர் உரமாக நமக்கு அளிக்கும் உயிரி எது?

5. இழப்பு மீட்டல் திறன் பெற்ற உயிரி எது?

6. இவ்வுலகின் ரட்சகனாக மாறியுள்ள உயிரி எது?

7. 'உழவனின் நண்பன்' என்று அழைக்கப்படும் உயிரி எது?

**- சிவ. மணவழகி,**
**திருவாரூர்**

VI. 12 நண்பர்கள் சேர்ந்து 7 கொய்யாப் பழங்களை வாங்கினர். அதைச் சமமாக பங்கிட்டு சாப்பிட்டார்கள். எப்படி பங்கிட்டு இருப்பார்கள்?

## VII. கடிப்புதிர்:

பத்துக்குள் ஓர் எண்ணை நினைத்துக் கொள்ளுங்கள். அதை ஒன்பதால் பெருக்குங்கள். அதனுடன் எட்டைக் கூட்டுங்கள். பின் அதை இரண்டால் பெருக்குங்கள். நீங்கள் நினைத்த எண்ணை அதிலிருந்து கழியுங்கள்.

கண்ணை மூடிக் கொள்ளுங்கள். உங்கள் கண்முன் என்ன இருக்கும்?

**- சு. கண்மணி**
**மிட்டூர்**

---

**விடைகள்:** I. 8+2=10, 12-2=10, 5x2=10, 20÷2=10, 8+12+5+20=45.

II. 503


III. வியாபாரியிடம் இருந்த யானைகள் - 5, குதிரைகள் - 25, நாய்கள் - 70

IV. புறப்பட்ட ஒரு மணி நேரத்துக்குப் பின், அதாவது 5 மணிக்கு...

V. அனைத்திற்கும் ஒரே விடை மண்புழு

VI. நான்கு கொய்யாப் பழத்தை 3 துண்டுகளாக 12 துண்டுகள் வெட்டி இருப்பார்கள்.

VII. இருட்டு




# கோகுலம் சந்தா செலுத்துங்கள்; கதை கேளுங்கள்!

எப்படி பெறலாம்?

* புதிதாக சந்தா செலுத்தலாம் ☐ * ஏற்கெனவே உள்ள சந்தாவை மேலும் ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கலாம் ☐ * உங்கள் நண்பருக்குப் பரிசாக சந்தா கட்டி நீங்கள் காஸெட் பெறலாம். ☐

பெயர்: ........................................ நண்பரின் பெயர்: ........................................

முகவரி: ........................................ முகவரி: ........................................

........................................ ........................................

........................................ ........................................

........................................ ........................................

ஒரு வருட சந்தா ரூ. 72/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் அனுப்பினால் ரூ.20/- கூடுதலாக சேர்த்து அனுப்புங்கள்.

*அனுப்ப வேண்டிய முகவரி:*

**சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032**




1862ல் 'எட்டின் லெனோர்' என்ற ஃபிரெஞ்சு நாட்டு அறிவியல் விஞ்ஞானி தன்னுடைய பழைய குதிரை வண்டியின் இரண்டு சக்கரங்களுக்கிடையே எஞ்சின் ஒன்றை வடிவமைத்துப் பொருத்தினார். அந்த வண்டியை பாரிஸுக்கு அருகில் உள்ள வின்செனிஸ் காடு வரை ஓட்டிக் காட்டினார். இதுதான் வாகன வரலாற்றின் முதல்படி. பின்னர் 'தானே முன்னோக்கி'ச் செல்லக் கூடிய எஞ்சின்களை உருவாக்கினார். இவை எடை அதிகமாக இருந்ததால் அந்த வண்டிகள் விரைவாகச் செல்ல முடியவில்லை. குதிரைகள் இழுக்காத வண்டிகள் என்றும் கோச் வண்டிகள் என்றும் இவை அழைக்கப்பட்டன.



பின்னாளில் எடைக்குறைவான, வாயுவால் இயங்கக் கூடிய, நீராவி எஞ்சின்கள் பொருத்தப்பட்டன.

1880களில் பெட்ரோலில் இயங்கும் எஞ்சின்கள் புழக்கத்துக்கு வந்தன. ஒவ்வொரு வகை எஞ்சினும் பொருத்தப்பட்டு இயக்கப்பட்டபோது வண்டிகளின் வடிவமைப்பும் மாறிக் கொண்ட வந்தது. 1885ல் பெருமளவில் வண்டிகள் உற்பத்தி செய்யப்பட்டு, பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டன. இவ்வகை கார்கள் ஜெர்மனியில் உள்ள 'மான்

ஹெய்ன்' என்ற இடத்திலிருந்த 'கார்ல் பென்ஸ்' பணிமனையில் உற்பத்தி செய்யப்பட்டன. இங்கு தான் ஆட்டோமொபைல் எனச் சொல்லப்படும் தானியங்கி மோட்டார் வாகனங்களின் உற்பத்தி தொடங்கியது.

1893ல் அமெரிக்காவில் தூரியா சகோதரர்கள் அமெரிக்காவின் முதல் காரைக் கண்டுபிடித்தனர். 'ஓல்ட் மொபைல் கர்வ்டு டேஷ்' எனப்படும் இவ்வகைச் சிறிய கார்கள் அமெரிக்காவில் ஆயிரக்கணக்கில் விற்றன.

1894ல் உறுதியான கட்டமைப்புடன் கூடிய 'பென்ஸ் வெலோ' என்ற கார்கள் உருவாக்கப்பட்டன. இவை குதிரை வண்டிகளின் அமைப்பில் இருந்தன. மேலும் இவ்வகைக் கார்கள்தான்

வெ. கலிவரதன்

இன்றைய கார்களின் முன்னோடி எனவும் கூறப்படுகிறது.

ஃபிரான்ஸ் நாட்டின் பான்ஹார்டு, லெவாசர், தெ தியான் புடன் மற்றும் ரெனால்ட் போன்ற கார் உற்பத்தியாளர்கள் புதுப்புது உத்திகளைக் கையாண்டு புதிய வடிவமைப்புடன் கூடிய கார்களை உருவாக்கினர். 1895ல் 'பன்ஹார்டு' எஞ்சினை வாகனத்தின் பின்புறம் பொருத்தி இயக்கினார். இவை 'சலூன் மாடல்' கார்கள் எனப்பட்டன. கார்களின் சக்கரங்கள் மிக உறுதியான செயின்களால் இணைக்கப்பட்டு இயக்கப்பட்டன. 'ரெனால்ட்' இம்முறையை மாற்றி இயக்கினார்.

1900ல் ஃபிரெஞ்ச் ரன்








அபவுட்ஸ் என்ற கார்கள் உருவாகி, மிகப் புகழ் பெற்றன.

1903ல் 'டியான் பூடன் மாடல் Q' என்ற கார்கள் 846 சி.சி. திறன் கொண்ட எஞ்சின்கள் பொருத்தப்பட்டு இரண்டு மடங்கு வேகத்தில் ஓடின. விலை குறைவாக இருந்ததால் இவ்வகைக் கார்கள் செல்வந்தர்களால் பெரிதும் விரும்பப்பட்டன. அவர்களின் விருப்பத்திற்கேற்ப இக்கார்கள் அடிக்கடி வடிவம் மாறின.


1906ல் 'சில்வர் கோஸ்ட்' என்ற உலகின் சிறந்த காரை ரோல்ஸ் ராய் தயாரித்தார். ஆனால் விலை அதிகமிருந்ததால் செல்வந்தர்கள் மட்டுமே பயன்படுத்தினர். அதனால் அனைத்துத் தரப்பினரும் வாங்கக் கூடிய குறைந்த விலையில் 1908ல் 'மாடல் ஜிபோர்டு' என்ற காரை ஹென்றி போர்டு உருவாக்கினார். இந்த ஆண்டில் அமெரிக்காவில் இந்த வகைக் கார்கள் இரண்டு லட்சம் பேரால் வாங்கப்பட்டன. இது 1913ல் 2,50,000 ஆக உயர்ந்து, 1950ல் 15 மில்லியன் கார்களாக உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்பட்டன.

1920ல் 'தொ சென் பெர்க்யி', 'பெர்ட்லி' வகை கார்கள் வேகமான ஓட்டத்திற்கும் மகிழ்ச்சிக்கும் ஆன ஸ்போர்ட்ஸ் கார்களாக மாறின. இவை 160 கி.மீ. வேகத்தில் ஓடின. ஆல்பா ரோமியோ, பகாட்டி, செவர்லெட் போன்ற கார்களும் பந்தயங்களில் கலந்து கொண்டன. 1950ல் தான் பெட்ரோல் மூலம் இயங்கும் எஞ்சின்கள் பொருத்தப்பட்டு சுமார் 220 கி.மீ. வேகத்தில் ஓட்டிக் காட்டப்பட்டன.



1950-60 கால கட்டத்தில் தான் மூடிய கதவுகள், வசதியான இருவர் இருக்கைகள், வளைவான சாலைகளில் சுலபமாகத் திரும்பும் பவர் ஸ்டியரிங், ஜன்னல்களில் திரைச் சீலைகள், வண்டியை நிறுத்த பிரேக் போன்றவை உள்ளடக்கிய 'கிராண்ட் டூர்' கார்கள் உற்பத்தியாகின. பின்னர் ஜாகுவார், மெர்ஸிடிஸ் பென்ஸ், போர்ச், ஆஸ்டின் மார்ட்டின், மெகாரெட், ஃபெராரி போன்ற கார்கள் வடிவமைக்கப்பட்டன.

# குறுக்கெழுத்துப் புதிர்



விடை 78ஆம் பக்கம்

**இடமிருந்து வலம்:**


2. ஹைட்ரஜனும் ஆக்ஸிஜனும் சேர்ந்து உருவாகும் இன்றியமையாத திரவம் (2)
3. தங்கம் போன்ற நிறமுடைய, விலை மலிவான உலோகக் கலவை (4)
5. அணு விஞ்ஞானி மற்றும் ஜனாதிபதியின் சுருக்கமான பெயர் (3)
7. ஆற்றலைக் குறிப்பிடும் ஓர் அலகு (3)
12. இந்தியாவில் பிரபலமடைந்து வரும் ஜப்பானியக் கணித முறை (4)

**வலமிருந்து இடம் :**

6. பச்சையம் இல்லாத தாவரம் (3)
8. விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியப் பெண்ணின் பெயரில் பின் பாதி (3)
10. ஆய்வகங்களில் அதிகமாகப் பயன்படும் கண்ணாடிப் பாத்திரம் (3)
11. விமானங்களின் வருகையைக் கண்டறிய உதவும் கருவி (3)
14. தன்னைச் சுற்றி வளையம் கொண்ட கிரகம் (2)

**மேலிருந்து கீழ்:**

1. மனிதனின் பரிணாமக் கொள்கையை வகுத்தவர் (4)
8. சமீபத்தில் உலகைப் பயமுறுத்திய நோய் (3)
9. கரிதான்! ஆனாலும் கண்ணைப் பறிக்கும் (3)
10. உயிரினங்களை நகல் எடுக்கும் நவீன விஞ்ஞான முறை (4)
13. நீர்த் தாவரம் (2)



**கீழிருந்து மேல்:**


4. ஐம்புலன்களும் இருக்கும் மனித உடலின் பாகம் (2)
6. கூடி உண்ணும் பறவை (3)
7. மின்சாரத்தைக் கடத்தப் பயன்படும் செப்புக்--- (3)

- எஸ். கவிதா,
ஸ்ரீ ஜெயேந்திரர் பள்ளி,
திருநெல்வேலி

அமலாபுரியின் அரசர் அமரசிம்மன். அவருக்கு மதிவாணன் என்ற மிக மதிநுட்ப மந்திரி. மந்திரியின் மீது மிக்க நம்பிக்கை மன்னருக்கு. மந்திரிக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். காலம் உருண்டோடியது. மந்திரி நோய் ஏற்பட்டு படுத்த படுக்கையானார். எனவே வேறு அமைச்சரை நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது ராஜாவுக்கு. புதிய மந்திரியாக வீரசேனன் என்பவனை நியமித்தார் அரசர். வீரசேனன் நல்ல எண்ணம் கொண்டவன் அல்ல. பதவி ஏற்ற சில நாட்களிலேயே அரசரிடம் 'பழைய மந்திரி மதிவாணன் வாங்கிய கடனை இன்னும் திருப்பிக் கொடுக்கவில்லை' என்று திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டிருந்தான். அரசர் ''மந்திரியின் திறமையான சேவைக்குப் பரிசாக இருக்கட்டும்'' என்று கூறினார்.

ஆனால் சேனன், அவர் வீட்டிற்குச் சென்று அரசர் கடனைத் திருப்பித் தரும்படி கேட்டதாகப் பொய் சொல்லிவிட்டான். அரசரின் குணத்தை நன்கு அறிந்த மதிவாணன், இது மந்திரியின் வேலையாகத் தான் இருக்கும் என்று புரிந்து கொண்டார். யோசனை செய்தார். தன் இரு மகன்களையும் அழைத்து விஷயத்தைச் சொன்னார். தந்தையைப் போலவே தனயன்களும் அதிபுத்திசாலிகள்.

# விலை மதிப்பற்றது எது?



''அப்பா! கவலையேபடாதீர்கள். நீங்கள் பட்ட கடனை நாங்கள் அடைத்து விடுகிறோம்'' என்று தைரியமளித்தனர்.

மறுநாள். மந்திரி

யின் மகன்கள் அஜயன், விஜயன் இருவரும் அரண்மனைக்குச் சென்றனர். ''மன்னா! வணக்கம். எங்கள் தந்தை பட்ட கடனை அடைக்க விரும்புகிறோம். ஆனால் எங்களுக்கு வேலை ஏதும் இல்லை. எங்களுக்கு ஏதேனும் வேலை கொடுத்தால், நாங்கள் வேலை செய்து சம்பாதித்து கடனை அடைத்துவிடுவோம்'' என்றனர். இது புது மந்திரியின் வேலை என்பதை நொடியில் புரிந்து கொண்டார் மன்னர். இருந்தும் ஒன்றும் பேசாமல் ''சரி! நாளைக்கே வந்து இருவரும் வேலைக்குச் சேருங்கள்'' என்றார். அஜயனுக்கு வாயிற் காப்போன் வேலையும் விஜயனுக்கு தோட்டத்தை கவனிக்கும் வேலையும் அளிக்கப்பட்டன.

ஆர்.சாரதா

அரசருக்கு இருவரும் நன்றி கூறி விட்டு, கொடுத்த வேலையை மன்னர் மகிழும்படி செய்து வந்தனர். நாட்கள் நகர்ந்தன. தாங்கள் பெறும் சம்பளத்தைக் கொண்டு, தந்தையின் கடனை அடைப்பதற்கு பல வருடங்கள் ஆகும் என்பதை எண்ணி யோசனை செய்தனர்.

**ம**றுநாள் வாயில் காப்போன் அஜயன், அரசர் அந்தப் பக்கமாக வந்தபோது, ''மன்னா! இந்த



உலகிலேயே விலை மதிப்பற்றது எது?'' என்று கேட்டான். அரசர் மௌனம் சாதிக்கவே ''நாளைக்கு அரசவையில் இந்தக் கேள்வியைக் கேளுங்கள்'' என்றான். இந்தக் கேள்விக்குச் சரியான பதிலை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் அரசனுக்கும் இருந்ததால், ''சரி, அப்படியே செய்கிறேன்'' என்றார்.

மறுநாள். சபை கூடிற்று. மன்னர் அவையோரிடம், ''இந்த உலகத்திலேயே விலை மதிப்பற்றது எது?'' என்று கேட்டார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பதில் சொன்னார்கள். 'விலை மதிப்பற்ற நவரத்தினங்கள் கொண்டுள்ள இந்தப் பூமிதான் விலை உயர்ந்தது' என்றார் ஒருவர். 'அரசரின் கஜானாதான் விலை மதிப்பற்றது' என்றார் மற்றவர். அவர்களின் பதில்கள் ஏதும் திருப்தியளிக்கவில்லை அரசருக்கு. உடனே வாயிற்காப்போனை அழைத்தார். அவையோர் கூறிய பதில்களையும் அவை தனக்குத் திருப்தியளிக்கவில்லை என்றும் கூறிய அரசரைப் பார்த்தான் அஜயன். ''மன்னா! தோட்டக்காரன் விஜயனைக் கூப்பிட்டுக் கேளுங்கள். அவன் என்ன சொல்கிறான் என்று பார்ப்போம்'' என்றான். விஜயன் வரவழைக்கப்பட்டான். அவனிடம் கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு உடனே விஜயன் ''மன்னா, சொல்வாக்கே செல்வாக்கு, மனிதனின் வாக்கே உயர்ந்தது'' என்றான். அரசருக்கு இந்தப் பதில் திருப்தியளித்தது. அஜயனும் 'சரி' என்று ஆமோதித்தான். விஜயனின் பதிலில் மகிழ்ந்த மன்னர் அவனுக்கு நிறையப் பணம் பரிசாக அளித்தார்.

**மா**தங்கள் சென்றன. அஜயன் அந்தப் பக்கம் வந்த அரசரைப் பார்த்து, ''யாருடைய வாக்கு விலை மதிப்பற்றது என்று தெரிந்து கொண்டால் நல்லதல்லவா!'' என்று கேட்கவும், மறுநாள் மன்னர் இந்தக் கேள்வியை அவையில் வைத்தார். மீண்டும் பல பதில்கள். ''அறிவுடையவனின் வாக்கே விலை மதிப்பற்றது'' என்றார் ஒருவர். ''அறம் செய்பவர்களின் வார்த்தைகள் மதிப்பற்றது'' என்றார் மற்றவர். இப்பொழுதும் இவர்களின் பதில்கள் அரசருக்குத் திருப்தியளிக்கவில்லை. மீண்டும் தோட்டக்காரன் அழைக்கப்பட்டான். ''எந்த மனிதன் எந்தச் சூழ்நிலையிலும் மனம் மாறாது ஒரே மாதிரி இருக்கிறானோ அவனது

## யார் அந்தப் பிரபலம்?



**இவர்கள் படைத்தது பெரும் சாதனை மட்டுமல்ல; 'உயரமான' சாதனையும் கூட.**

சொல் மிக விலை மதிப்பற்றது'' என்றான். மீண்டும் சரியான பதில் என்று மகிழ்ந்த மன்னர் இந்த முறையும் பணப்பரிசு அளித்தார்.

மாதங்கள் மறைந்தன. மீண்டும் அஜயன், அரசரிடம் இன்னொரு கேள்வியை வைத்தான். ''மன்னா! இரண்டு கேள்விகளுக்கும் சரியான பதில் கிடைத்ததற்கு மகிழ்ச்சி. ஆனால் ஒரு சந்தேகம், அப்படிப்பட்ட மனிதனை எப்படி கண்டுபிடிப்பது?'' என்றான். இந்த முறை அரசர் அரசவையைக் கூட்டவில்லை. நேராக தோட்டக்காரனை அழைத்து வரச் சொன்னார். வாயிற்காப்போன் கேட்ட கேள்வியையும் சொன்னார். உடனே ''மன்னா! பொறுமை குணம் கொண்ட ஒருவனால் தான் மாறாமல் எப்போதும் நேர்மையாக, சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடியும். எனவே பொறுமையே வாய்மையின் ஆபரணம்'' என்றான். ''சபாஷ்! சரியான பதில்!'' என்று விஜயனைப் பாராட்டி மீண்டும் பணமுடிப்பு அளித்தார் அரசர்.

அஜயன், விஜயன் இருவரும் அன்று வீட்டிற்கு வந்தனர். அரசர் கொடுத்த பணத்தொகையை எண்ணினர். மூன்று முறை அரசர் கொடுத்த பணம், தந்தை அரசரிடம் பட்ட கடனை அடைக்கப் போதுமானதாக இருந்தது. தந்தையிடம் சொல்லிவிட்டு புதல்வர்கள் இருவரும் மறுநாள் அரண்மனைக்கு வேலைக்கு வந்தனர்.

அன்று அரசவை கூடியிருந்தது. ஆன்றோர்கள் பலர் நிறைந்திருந்தனர். அஜயனும் விஜயனும் அரசரிடம் சென்று, ''அரசே! இந்தாருங்கள்! எங்கள் தந்தை தங்களிடம் கடனாகப் பெற்ற பணம். தந்தை பட்ட கடனைத் தவறாது திருப்பியடைத்தல் தனயர்களின் கடமையல்லவா!'' என்று பணிந்து அரசரிடம் பணத்தை வைத்தனர். மன்னர் இவர்கள் செயலைக் கண்டு வியந்து போனார். மனம் மகிழ்ந்தார். அருகில் அமர்ந்திருந்த அமைச்சரைப் பார்த்தார். அரசரின் பார்வையைப் பார்க்க வெட்கி, வேறு புறம் பார்வையை மாற்றிக் கொண்டான் மந்திரி.

மன்னர் இருவரின் புத்தி சாதுர்யத்தை வியந்து பணத்தை அவர்களிடமே திருப்பிக் கொடுத்தார். விஜயனை மந்திரியாக்கினார். அஜயனுக்கும் பதவி உயர்வளித்தார்.




''என்னங்க இது, மளிகைக் கடையில் வாங்கின துவரம் பருப்புல இவ்வளவு ஓட்டை இருக்குது?''

''அப்படின்னா அது 'துவாரம் பருப்பு'ன்னு சொல்லுங்க!''

- ஏ.எஸ்.யோகானந்தம்

# குதிரைகளைத் தேர்ந்தெடுப்பது எப்படி?

**சி**ரியா நாட்டைச் சேர்ந்த மொபைல் போன் நிறுவனம் ஸ்பேஸ்டெல் சிரியா. இந்த நிறுவனம் கின்னஸ் சாதனைக்காக சமீபத்தில் 16 மீட்டர்



நீளம் 12 மீட்டர் அகலம், நான்கு டன் எடை கொண்ட 'மார்சிபின் என்ற இனிப்பைச் செய்தது. இதைத் தயாரிக்க 225 சமையல்காரர்கள் 120 கிலோ பருப்பு, மூன்று டன் குளுகோஸ், 630 லிட்டர் தண்ணீர் மற்றும் பல பொருள்களைப் பயன்படுத்தினர். இந்த உலக சாதனை நிகழ்ச்சியை 40 ஆயிரம் பேர் பார்த்தனர்.


**- பூ. கமல்நாத், நாமகிரிப்பேட்டை**



**இ**ந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அதிகமாக 5,600 வகையான தாவரங்கள் இருக்கின்றன.

**- கு. அருணாசலம், தென்காசி**

**அ**ட்லாண்டிக் கடலில் 'காட்' என்ற ஒரு வகை மீன் காணப்படுகிறது. இது ஒரு தடவைக்கு 60 லட்சம் முட்டைகள் இடும். இது இத்தனை முட்டை இட்டாலும் முட்டை பொறித்து மீன் குஞ்சாகி வெளிவருவது ஆறு அல்லது ஏழுதான்!



**- மா. கண்ணன், இராஜபாளையம்**

**அ**ரபு நாடுகளில் அரசருக்கான குதிரையைத் தேர்ந்தெடுக்கும் முறையே அலாதிதான். முதலில் உயர் ஜாதிக் குதிரைகள் ஐம்பதில் ஐந்து குதிரைகளைத் தேர்ந்தெடுப்பர். அந்த ஐந்திற்கும் விசில் சத்தத்தைப் புரிந்து கீழ்ப் படியும்படியாகப் பயிற்சி கொடுப்பார்கள்.



அதன்பின்பு ஐந்து குதிரைகளுக்கும் கொழுத்த உணவைக் கொடுப்பர். ஆனால் தண்ணீர் தராமல் பல நாட்கள் தவிக்க விடுவர். பின்னர் ஐந்து குதிரைகளையும் நீர்த் தடாகத்துக்கு அழைத்துச் சென்று குதிரையின் கட்டுகளை அவிழ்த்து விடுவர். குதிரைகள் பாய்ந்தடித்து நீர் பருக ஓடும். அப்போது குதிரையின் நடத்துனர் விசில் அடிப்பார். அந்த நிலையிலும் விசிலுக்குக் கீழ்ப்படிந்து எந்தக் குதிரை அவரிடம் வருகிறதோ, அதுவே மன்னனின் குதிரையாகத் தேர்ந்தெடுக்கப்படும்.

**- குட்டி பிரசன்னா,**
**கரூர்**



**கு**டியரசுத் தலைவரின் மெய்க்காப்பாளராக இருக்க வேண்டுமானால், ராணுவத்தில் குறைந்தபட்சம் மேஜர் ஜெனரல் பதவி வகிப்பவராக இருக்க வேண்டும். ஆறாவது ஜார்ஜ் மன்னர் இந்தியாவிற்கு வந்தபோது, இந்தியாவின் சமஸ்தானங்களைச் சேர்ந்த பல மன்னர்களே மெய்க்காப்பாளர்களாக இருந்திருக்கிறார்கள்.



**- கே.எல். சந்தரூபி,**
**மேலகிருஷ்ணன் புதூர்**

**மு**தன் முதலாக வால் நட்சத்திரம் என்று அழைக்கப்படுகிற 'வால் விண்மீன்' பற்றிய குறிப்பைப் பதிவு செய்தவர்கள் சீனர்கள் தான். கி.பி. 611ல் தோன்றிய வால் விண்மீனை ஒரு 'தெய்வீகத் துடைப்பம்' என்றனர்.



**- சு. இலக்குமணசுவாமி,**
**மதுரை**

**தா**ஜ்மஹாலை இடித்து அதிலுள்ள சலவைக் கற்களை லண்டன் மாநகரத்தில் ஏலம்

விட்டு விற்பது என 1830ம் ஆண்டில் ஆங்கில அரசு முடிவு செய்தது. இடிப்பதற்கான இயந்திரங்களும் தயாராக இருந்தன. ஆனால், லண்டனில் ஏலம் ஏமாற்றமாகத் தோல்வியில் முடியவே, தாஜ்மஹால் தப்பியது.

- என். சுஜாதா,
சென்னை



**தே**ள் கடும் குளிரானாலும் சரி, கடுமையான வெப்பமாக இருந்தாலும் சரி, எந்தவித பாதிப்பும் இல்லாமல் வாழ்ந்து வருகிறது. உணவை உட்கொள்ளாமல் பல மாதங்களுக்கு பனிப் பிரதேசங்களில் வாழவும் அதனால் முடியும். மேலும் இது தண்ணீர் அருந்துவதில்லை. இது உண்ணும் உணவில் இருந்தே தனக்குத் தேவையான நீரைப் பெறுகிறது. 600 வகையான தேள்கள் பூமியில் உள்ளன.

- என். ஜரினா பானு,
திருப்பட்டினம்

**கி**ரிக்கெட் விளையாட்டில் 'செஞ்சுரி' என்றால் 100 ரன்கள் என்று தெரியும். கேரம் விளையாட்டில் 'செஞ்சுரி' என்ற சொல் உள்ளது. ராணிக்காயுடன் (சிவப்புக் காய்) 9 வெள்ளைக் காய்களையோ அல்லது 9 கறுப்புக் காய்களையோ தொடர்ந்து 'பாக்கெட்.' செய்வதற்குத்தான் கேரம் விளையாட்டில் 'செஞ்சுரி' என்று பெயர்.

- ஏ.எஸ். யோகானந்தம்,
ஈரோடு

## குறுக்கெழுத்துப் புதிர் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 டா | | | | | | லை | |
| 2 நீ | ர் | | ம் | | 3 பி | த் | 4 த | ளை |
| | வி | | 5 க | லா | ம் | | | |
| | ன் | ளா | 6 கா | | 7 க | லோ | ரி | |
| | | | | | | | | |
| | லா | வ் | 8 சா | | 9 வை | டு | 10 கு | |
| | | | ர் | டா | 11 ர | | ளோ | |
| 12 அ | 13 பா | க | ஸ் | | ம் | | னி | 14 ச |
| | சி | | | | | | ங் | |



# உறுதிமொழி அவசியம்!

**கொ**ஞ்சம் கூட நிறைவேற்ற முடியாமல் போனால் கூட இது போன்ற நன்னாட்களில் உறுதிமொழிகள் எடுத்துக் கொள்வது நல்லது தான். காஞ்சி மா முனிவர் 'மாம் பழ' உதாரணத்தால் இதை நமக்கு விளக்குவார். மா வடுவில் துவர்க்கிறது. காயில் புளிக்கிறது. ஆஹா! நாம் இப்படி துவர்க்கிறோமே! இப்படி புளிக்கிறோமே! என மனம் கலங்கிச் சோம்பி சும்மா இருந்து விடுவதில்லை. எப்படியும் இனிமையான பழமாக மாறியே தீருவது என முயன்று இறுதியில் இனிமையான பழமாக மாறி விடுகிறது. நாமும் நமது முயற்சியைத் தொடர்ந்து கொண்டு இருந்தால் நிச்சயம் வெற்றி பெறுவோம்!

**- வெ. கல்யாணி,**
**திருநெல்வேலி**

**ஒ**ரே தடவையில் நிறைய உறுதி மொழிகளை எடுக்காமல், வருடத்திற்கு ஒன்று என்று எடுத்துக் கொண்டு, அதைக் கடைப்பிடிப்பதில் உறுதியாக இருக்க வேண்டும். உதாரணத்திற்கு அம்மா என்ன சொன்னாலும் எதிர்த்துப் பேசுவது, கூடப் பிறந்தவர்களுடன் சண்டை பிடிப்பது, நன்றாகப் படிக்காமலிருத்தல்... இப்படி இருந்தால் வருடம் ஒன்றாக உறுதிமொழி எடுத்துத் தன்னைச் சீர்படுத்திக் கொள்ளலாம்.

**- ஆர். அம்பிகா,**
**மதுரை**

**நா**ம் வருடா வருடம் உறுதி மொழி எடுப்பது சரியே. அனைத்தையும் இல்லாவிட்டாலும் முடிந்தவரை நிறைவேற்ற முயலலாமே. ஆண்டுக்கு ஒன்று என்று நமது பழக்க வழக்கங்களைச் சீர்செய்தால் கூட நமது வாழ்நாளுக்குள் நிறைய விஷயங்களுக்கு முன் மாதிரியாக முடியும். நம்மைப் பார்த்து மற்றவர்களும் அதனை கடைப்பிடிக்க முயலுவார்கள். என்னுடைய உறுதிமொழிகளும் கிட்டத்தட்ட டெய்சியினுடையது போலவேதான் உள்ளது. கூடுதலாக அப்பாவுடன் சேர்ந்து தோட்டவேலை செய்வதையும் சேர்த்துள்ளேன்.

**- வரதராஜன்,**
**திருவாரூர்**



# உபயோகமான விமானம்!

*அன்புடன்...*

பூத்துக் குலுங்கும் புது மணக் கதம்ப மலராய்ப் புத்தாண்டின் தொடக்கமான இதழ் விரித்திருக்கும் கோகுலத்தைச் சிறப்புப்படுத்தும் 2005 நாள் குறிப்பேடு மற்றும் 'ஆண்டுத் திட்ட அட்ட வணை' மனக் கண்ணில் ஒற்றிக் கொள்வன வாய்த் திகழ்





கின்றன! வழக்கமான வெவ்வேறு படைப்புகள் பொருள் புதிதா கவும் சுவை புதிதா கவும் அமையப் பெற்றுள்ளன!

**- ச.ஆ.கேசவன்,**
**இனாம்மணியாச்சி**

இந்த முறை கோகுலம் சுழல் கோப்பையை எங்கள் பள்ளிக்கு அளித்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். இனிப்பு சாப்பிடும் வரை உள்ளது. கோகுலம் சுழற் கோப்பை மகிழ்ச்சி யின் எல்லை வரை உள்ளது.

**- ஜெ. வெங்கிடேசன்,**
**நல்லூர்**

'சினிமா எடுக்கும் பாம்பு' சிறுகதை சுவாரஸ்யமாக இருந்தது. காகிதங்கள் கண்டுபிடிக்கபடாத போது பட்டங்களைப் பட்டுத் துணியால் தான் தயாரித்தார்கள் என்பதையும் பட்டங்கள் பற்றிய நிறைய சிறப்புச் செய்திகளையும் விளக்க மாக அறிந்தேன்.

**- டி.முருகேசன்**
**திருவாரூர்**

கோகுலத்தைப் படித்தேன். தொடக்கத்திலிருந்தே 'புதையல் தீவு' தொடர்கதை மிகவும் விறுவிறுப்பாக உள்ளது. என்னைப் போன்ற பல மாணவர் களுக்கு வாண்டுமாமாவின் அம்மாவைத் தேடி தொடர்கதை ஒரு பரிசாக அமைந்துள்ளது.

**- டி. பாலன், சென்னை**

அந்தக் காலம் முதல் இக்காலம் வரை மணி பார்ப்பது எப்படி என்று விளக்கிக் கூறியது மிகச் சிறப்பாக இருந்தது.

**- கே. அருண்,**
**ராணிப்பேட்டை**



# அன்னம் பாலையும் நீரையும் பிரிக்குமா?

**அன்புள்ள ஜக்கு...**



● எம். வினோத், சங்கரன்கோவில்.

***? காலண்டர், டைரி போன்றவற்றை எப்போதாவது காசு கொடுத்து வாங்கியது உண்டா ஜக்கு?***


நான் பள்ளியில் படிக்கும் போது டைரி மேல் எனக்கு ஆர்வம் அதிகமிருந்தது. என்னுடைய நச்சரிப்பு தாங்காமல் அப்பாவோ, அம்மாவோ தங்களது டைரிகளை எனக்குக் கொடுத்து விடுவார்கள். இப்போதோ எனக்கே அன்பளிப்பாக டைரிகள் வந்து சேர்கின்றன. எனவே டைரி, காலண்டர்களைக் காசு கொடுத்து வாங்கிய அனுபவம் இல்லை வினோத்.



● ஜோதி, ஸ்ரீபெரும்புதூர்

***? உழைப்பும் திறமையும் சில சமயம் வீண் போகின்றனவே ஏன் ஜக்கு?***

நீங்களே சொல்லி விட்டீர்கள், சில



சமயங்களில் வீணாவதாக. எந்தக் காரியத்தையும் சூழ்நிலையின் தன்மையைக் கவனித்து, உழைப்பையும் திறமையையும் வெளிப்படுத்தும் போது அந்தக் காரியம் பெரும்பாலும் வெற்றியடைந்து விடுகிறது. இந்த மாதிரி தோல்வி ஏற்படும் போது மனம் துவளாமல் மீண்டும் குறையைச் சரி செய்து கொண்டு முயற்சித்தால் வெற்றி நிச்சயம் ஜோதி.

● க.ச.ஆதிஷ் கார்த்திக்,
மாதேசம்பாளையம்.

***? அன்னப் பறவை மட்டும் எப்படி தண்ணீரையும் பாலையும் பிரிக்கிறது?***

சிவப்பைக் கண்டால் மாடு முட்டும், காகம் கத்தினால் விருந்தினர் வருவர் என இது போன்ற நிறைய செய்திகள் காலம் காலமாக நம்மிடம் உலவி வருகின்றன. அதே போல்தான் அன்னப் பறவை பாலையும் தண்ணீரையும் தனித்தனியாகப் பிரிக்கும் என்று கூறுவது. இந்தச் செய்திக்கு அறிவியல் ஆதாரம் இல்லை ஆதிஷ்.

**யார் அந்தப் பிரபலம்?**



**புத்த மதத்தைச் சேர்ந்தவர்**

● கே. அருண்,
ராணிப்பேட்டை

***? பெங்குவின் பறவையால் பறக்க முடியுமா ஜக்கு?***

பறக்க முடியாத பறவைகளில் பெங்குவினும் ஒன்று என்பதை நீங்கள் கேள்விப்பட்டதில்லையா அருண்? பெங்குவினின் உடல் எடை அதிகம். அந்த எடையைத் தூக்கிக் கொண்டு பறக்க முடியாது. ஆனால் நன்றாக நீந்தும்; வேகமாக நடக்கும்.

● இரா. கோமதி,
கூடுவாஞ்சேரி

***? சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு என்ன உதவி செய்தாய் ஜக்கு?***

இயற்கையின் இந்தக் கொடூரத் தாக்குதலை நினைக்கும் போது மனம் பதறுகிறது. இழந்த உயிர்களையும் உடைமைகளையும் யாராலும் திருப்பித்தர இயலாது. ஆனால் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 'உங்களுக்கு நாங்கள் இருக்கிறோம்' என்று ஆதரவு கரம் நீட்ட முடியும். உலகெங்கும் இருந்து பல்லாயிரக்கணக்கானவர்கள் உதவி செய்து வருகின்றார்கள். நமது கோகுலம் அலுவலகம் மூலமாகவும் எனது குடியிருப்பு மூலமாகவும் பொருள், பண உதவியை அளித்துள்ளேன் கோமதி. மிகச் சிறிய அளவாக இருந்தாலும் நம்மால் முடிந்ததை நாம் செய்ய வேண்டியது நமது கடமை. எல்லோரும் செய்திருப்பீர்கள் என நம்புகிறேன் கோமதி.


# GOKULAM

*The magazine for children*

February 2005

## *A unique blend of modern ideas and traditional values!*

Recommended by TEACHERS,
Welcomed by PARENTS,
Adored by CHILDREN!



BANGALORE Special

**Rs.8/- only**



# POTTERMANIA

**AND LOTS 'N LOTS OF FUN!**

**HURRY! BOOK YOUR COPY TODAY!**

For Subscriptions mail to :Gokulam, Kalki Buildings,
47- NP, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai-600 032
E-mail:subscription@kalkiweekly.com

# தானாக


பா.முருகேசன்

மன்னரின் அறிவிப்பை காடு முழுவதும் அறிவித்துக் கொண்டிருந்தது அணில் அய்யாச்சாமி:

"வனத்தில் வாழும்
விலங்குகளே
வந்து என்முன்
நில்லுங்களேன்
மனதால் உயர்ந்த நம் மன்னர்
மக்கள் உங்கள்
அனைவருக்கும்
இனிப்பாய் சொன்ன
செய்தியொன்று
இங்கே என்னிடம்
இருக்கிறது
கனிந்த இதயம் கொண்ட நம்
காட்டின் மந்திரி நரசிம்மர்
இனிவரும் காலம்
மந்திரியாய்
இளைஞர் ஒருவரை தேர்வு
செய்ய
தனி நபர் போட்டிகள்
நடத்திடுவார்
தயக்கமின்றி அதில் பலரும்
துணிவுடன் கலந்து
கொண்டிடுக!
திறமை காட்டி வென்றிடுக!"

என்ற அறிவிப்பினை கேட்ட காட்டு விலங்குகள் தமக்குள்ளாக பலவாறு பேசிக் கொண்டன.

மறுநாள் காலை பல இளைய விலங்குகள் அரண்மனை முன்பாக குவியத் தொடங்கின. காட்டு டாக்டர் குரங்கு ரங்காச்சாரி ஆராய்ந்து நோயுற்ற பலமில்லாதவர்களை வெளியே அனுப்பி விட்டு நல்ல திடகாத்திரமான விலங்குகளை மட்டும் தேர்வு செய்து அரண்மனையின் உள்ளே அனுமதித்தார். குரங்கு ரங்காச்சாரியாரால் தேர்வு செய்யப்பட்டவர்களில் கரடி கல்யாணம், பூனை பொன்னையன், நரி நந்திவர்மன், காட்டெருமை கரியண்ணன், புலி பூவிழியன், கழுதை கைலாசம், சிறுத்தை சின்னான் ஆகியோருடன் இன்னும் சிலர் இருந்தனர்.




இவர்கள் அனைவரும் மந்திரியான நரி நரசிம்மர் முன்னே அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களுக்கு சில கேள்விகள் கேட்டு பதில் தெரியாதவர்களை வெளியே அனுப்பி விட்டு பொது அறிவு தேர்வில் வென்றவர்களை மட்டும் மன்னரான சிங்க ராஜா முன்பாக அழைத்துச் சென்றார் நரியார்.

சிங்கராஜாவிடம் இளைஞர்களை ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தினார் மந்திரியார்.

"கரடி இவன் பெயர்
கல்யாணம்
காவேரி இவனது தாயாராம்
பூனை இவனே
பொன்னையன்

பூங்கொடி பூனையின் செல்ல
மகன்
கரியன் இவன்தான் கைகேயி

# லிக்கும் மேளம்!



காட்டெருமை பெற்ற மகன்
செவப்பி சிறுத்தை
பெற்றெடுத்த
சின்னான் இவனே
சின்னவனாம்''

என மந்திரி அறிமுகப்படுத்த ஒவ்வொருவரையும் தட்டிக் கொடுத்து பாராட்டிய மன்னர் ''இளைஞர்களே நம் காட்டிற்கு

மந்திரியாக இருந்து காட்டின் வளர்ச்சிக்கு துணையாக பல காரியங்கள் நடத்துவதற்கு உடல் நலமும் பொது அறிவும் தேவை என்பதால் உடல் தேர்வு, பொது

அறிவுத் தேர்வு ஆகியவை நடத் தப்பட்டது. இனி உங்களது நுண்ணறிவு திறனை பரிசோதிக் கும் விதமாக நமது மந்திரியார் சில தேர்வுகளை நடத்துவார். அவர் நடத்தும் தேர்வுகளில் வெற்றி பெறுபவர் எவரோ அவரே நம் காட்டின் வருங்கால மந்திரி யாகும் வாய்ப்பினை பெறுவர். போட்டிகள் முடிந்தபின் உங் களைச் சந்திக்கிறேன். வரு கிறேன்'' என கூறி அவர்களிட மிருந்து விடைபெற்றார் சிங்க ராஜா.

''என்னிடம் உள்ள
தடியிதனை
எல்லோரும் உற்றுப் பாருங்
களேன்
மென்மையான இத்தடியின்
வேர் எது?
மலருடன் காய்தரும் தலை
எது?
என்பதை நீங்கள் கண்டு
ணர்ந்து
எனக்கு உரைத்திட
வேண்டுமின்று.''

விடை காண முடியாத வருத் தத்தில் இருந்த கரியண்ணன் காட்டெருமை அத்தடியை சிறுத்தை சின்னானிடம் கொடுத் தது.

மரச்சாயம் பூசப்பட்ட அந்தத் தடியினை கையில் வாங்கிய சிறுத்தை சின்னான் அதை மூக்கால் நுகர்ந்து வாசனை பார்த்தது. அதில் பூசப்பட்ட சாயத்தின் நெடியால் அந்தத் தடியின் தலைப்பாகத்தையும் வேர் பாகத்தையும் கணிக்க இய லாததால் செய்வதறியாது திகைத்து நின்றது.

அந்தத் தடியினை பிடுங்கிய பூனை பொன்னையன் அங்கி ருந்து வெளியேறியது.

பூனை பொன்னையன் சற்று நேரத்தில் திரும்பி வந்தது. அதன் முகத்தில் மகிழ்ச்சிக்கான அறிகுறியே மிகுதியாக இருந் தது.

அடுத்ததாக நின்றிருந்த தற் போதைய மந்திரியான நரி நரசிம் மரின் மகனான நரி நந்திவர்மன் தன் கையால் அந்தத் தடியை வாங்கிப் பார்த்தது. பின்னர் அதுவும் அங்கிருந்து வெளியேறி சென்று சிறிது நேரம் கழித்து திரும்பியது.

''நான் கண்டுபுடிச்சிட்டேன்'' என்று நரியின் பதிலைக் கேட் டதும் ''நான் தான் முதலிலேயே கண்டுபுடிச்சேன்'' என்றது பூனை பொன்னையன்.

இறுதியாக கரடி கல்யாணம் அந்தத் தடியை அங்கிருந்த மேசைமேல் வைத்துவிட்டு அமைதியாக நின்றது.

போட்டி நிறைவுற்ற நிலை யில் பூனை பொன்னையன், நரி நந்திவர்மன் ஆகிய இருவரைத் தவிர அனைவரும் வெளியேறி னர்.

இறுதியாக நின்ற இருவரிடம் இதில் தலை எது வேர் எது என

## யார் அந்தப் பிரபலம்?



அவர் பிறந்தது நேபாளத்தில்.

காட்டுங்கள் என்றதும், இருவரும் மிகச் சரியாக அடையாளம் காட்டினர்.

"உன்னால் எப்படி கண்டு பிடிக்க முடிந்தது?" என பூனை பொன்னையனிடம் மந்திரியான நரி நரசிம்மர் கேட்டதும்,

"காட்டின் நல்ல மந்திரியே
கனிந்த இதயம் கொண்டவரே!
தொட்ட தடியினை நான்
கொண்டு சென்று நீரின்மேல்
சட்டென வீசிட அத்தடியும்
சரிவாய் மிதந்திட நான் கண்டேன்
பாதிப்பகுதி நீரினுள் மூழ்கிடவும்
மீதிப்பகுதி நீரின்மேல் மிதந்திடவும்
நொடியில், நான் கண்டு கொண்டேன்
மூழ்கிய பகுதி வேர் என்றும்
மிதந்தது தலையே என்று நான்
விரைந்து முடிவு செய்துவிட்டு
வந்து நின்றேன் இவ்விடத்தில்"

என பூனை பொன்னையன் கூறியது.

"நீயும் இதேதான் செய்திருப்பாய், ஆனாலும் நீரில் போட வேண்டும் என்று உனக்கு எப்படி தோன்றியது?" என தன் மகனிடம் மந்திரியார் கேட்டார்.

"அது வந்து பூனையார் தந்த தடியில் ஈரம் படிந்திருந்ததைக் கண்டேன். அதை வச்சுதான் நான் முடிவு செய்தேன்" என்றது சின்ன நரி நந்திவர்மன்.

"யோசித்து முடிவு காண்பது என்பது மந்திரிக்கான தகுதிகளில் தலை சிறந்தது என்பதால் தான் இந்தப் போட்டியை ஏற்பாடு செய்தேன். இதில் நீங்கள் இருவருமே வெற்றி பெற்றுள்ளீர்கள் என்றாலும் உங்களில் ஒருவரை மட்டுமே எதிர்கால மந்திரியாக்க இயலும் என்பதால் மற்றொரு போட்டியை நடத்த வேண்டியது அவசியமாகிறது" என்றவர், அடுத்த போட்டியை அறிவித்தார்.

"தோலால் செய்த மேளமது
தானால் இசைதர வேணுமையா
அடித்திட ஆளின்றி மேளமது
அருமை ஒலியை தரும் வண்ணம்
அதனை ஆக்கிட இயன்றவர்தான்
அடுத்த மந்திரி ஆகிவிடலாம்!"

மந்திரியாரின் அறிவிப்பு தமக்குத் தெளிவாகப் புரியவில்லை என பூனை பொன்னையன்கூற மந்திரி விளக்கினார்.



*"இந்தக் கைகடிகாரத்தை இவ்வளவு குறைந்த விலையில் விற்கிறீங்களே இது நஷ்டம் வராதா?"*

*"ரிப்பேருக்கு வரும்போது சம்பாதிச்சுக்கலாம்னுதான்!"*

*– ச. அருண்சித்தார்த்*

## இவர்தான் அந்தப் பிரபலம்!



இமயத்தின் எவரெஸ்ட் சிகரத்தை முதலில் எட்டிய டென்சிங் நார்கே. கூடவே சென்று சாதனை படைத்த நியூசிலாந்துக்காரர் எட்மண்ட் ஹில்லரி. டார்ஜிலிங்கில் உள்ள இந்திய அரசின் இமாலயன் மலையேற்ற நிறுவனத்துக்கு டென்சிங்தான் முதல் இயக்குனர்.

- ஜி.எஸ்.எஸ்.

''இளைஞர்களே, நீங்கள் நாட்டில் மனிதர்கள் மேளம் என்ற ஒரு கருவியை செய்து இசை எழுப்புவதை அறிந்திருக்கலாம். அது போன்று ஒரு மேளத்தை நீங்கள் செய்து கொண்டு வர வேண்டும். ஆனாலும் அந்த மேளமானது யாருமே அடிக்காமல் ஒலி எழுப்பும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். இதுதான் நிபந்தனை'' என்று விவரித்தார்.

நிபந்தனை கேட்ட இருவரும் திருதிருவென விழித்தபடி அங்கிருந்து வெளியேறினர்.

பூனை பொன்னையன் வித்யாசமான சம்பவம் ஒன்று நிகழ்வதைக் கண்டதும் சட்டென எழுந்து வேகமாக ஓடலானது.

அரண்மனைக்குள் நுழைந்த பூனை பொன்னையன் சிங்கராஜாவின் அரசவை நடுவே அந்த மேளத்தை வைத்தது. அப்போது மேளத்திலிருந்து யாரும் அடிக்காமலேயே ஓசை வந்தது.

தனது நிபந்தனைப்படி யாருமே அடிக்காமல் ஒலி எழுப்பும் மேளத்தைக் கண்ட நரியார் உள்ளம் மகிழ்ந்து பொன்னையன் போட்டியில் வெற்றி பெற்றதாகவும் இனி எதிர்கால காட்டின் மந்திரியாக அதுவே இருக்கும் என்றும் அறிவித்தார்.

அங்கிருந்த பலருக்கும் ஆச்சர்யமாக இருந்தது. ''அதன் ரகசியம்தான் என்ன?'' என பலரும் பூனை பொன்னையனிடம் கேட்க அதுவும் தான் செய்ததை விரிவாக கூறியது:

''ஒரு மரத்தில் தேன்கூடு ஒன்றினைக் கண்டேன். தேன் கூட்டினைச் சுற்றி இலைகள் சூழ்ந்திருந்தன. தேனீக்கள் ஒவ்வொரு முறையும் கூட்டிலிருந்து வெளியேறும்போது இலைகள் மீது மோதுவதையும் அதிலிருந்து இலைகளின்மீது உரசும் மெல்லிய ஒலி வருவதையும் கண்டேன். அது கண்டவுடன் மேளம் செய்து அதனுள் தேனடையை வைத்தால் யாரும் அடிக்காமலேயே அவை மேளத்தை அடித்து ஓசை எழுப்பும் என்பதை புரிந்து கொண்டேன். அதன்படி செய்தேன். உங்கள் அனைவரின் பாராட்டையும் பெற்று வென்றேன்'' என்று கூறியது பூனை பொன்னையன்.

அங்கிருந்த அனைவரும் பூனையுடன் மகிழ்வாக ஆடிப்பாடி தங்களது புதிய மந்திரிக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

# பட்ஜெட் என்றால் என்ன?



“பிப்ரவரி மாதம் வந்து விட்டது. இனி பத்திரிகையில் பட்ஜெட், பற்றாக்குறை, பண வீக்கம் என்ற வார்த்தைகள் தாராளமாகவே அடிபடும். வருடத்திற்கு ஒருமுறை போடப் படும் மத்திய, மாநில பட்ஜெட் அல்லது நிதிநிலை அறிக்கைகள் அன்றாட வாழ்க்கையோடு தொடர்பு கொண்டதாகும். எனவே மாணவர் பருவத்திலேயே பட்ஜெட் பற்றிய அடிப்படை அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்” என்று சொல்கிறார் சென்னை பல்கலைக் கழக பொருளியல் துறைத் தலைவர் நாகநாதன்.

‘பட்ஜெட்’ என்றால் மதிப்பீடு என்று தான் பொருள். Bulga என்ற லத்தீன் சொல்லில் இருந்து மருவி வந்தக் காரணப் பெயர் தான் பட்ஜெட். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் நாட்டின் வரவு செலவு பற்றிய விவரங்களை ஒரு பையில் கொண்டு வந்து மக்களுக்குச் சமர்ப்பித்தார்களாம். அந்தப் பையின் பெயர் தான் Bulga. பொருளாதாரத்தின் மூன்று கூறுகள் உற்பத்தி, பங்கீடு மற்றும் நுகர்தல் ஆகும். நாடு, அரசு என்று தோன்றிய போது பொருளாதாரத்தின் இந்த மூன்று கூறுகளையும் கட்டுப்படுத்தும் பொறுப்பு, மன்னர்களுக்கு இருந்தது. இப்போது மக்களாட்சியில் அது தொடர்கிறது. காலப் போக்கில் அரசுக்கு என்று சில சமூக கடமைகள் வரையறுக்கப்பட்டன. உதாரணமாக கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் மக்களுக்கு அடிப்படை கட்டுமான





வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பு அரசுக்கு உண்டு. இவற்றைத் தவிர, சாலை போடுதல், நீர் ஆதாரங்களைப் பெருக்குதல், மின் கட்டமைப்பை மேம்படுத்தல், ஆராய்ச்சி என்று மக்கள் நல்வாழ்க்கையோடு தொடர்புடைய பலவிதமான பணிகளைச் செய்யவேண்டிய நிலையில் அரசு இருக்கிறது.

சரி, இதற்கெல்லாம் பணம் எப்படி வரும்? அரசுக்கு வரக்கூடிய வருவாய், மக்கள் நலன்களுக்கும் வேறு பல பணிகளுக்கும் செலவிடக் கூடிய தொகை இரண்டையும் ஒப்பு நோக்கி, மேலாண்மை செய்து போடப்படுவது தான் நிதிநிலை அறிக்கை. வருவாயை மீறிய செலவு இருந்தால் இடைவெளியைச் சரிக்கட்ட வரி போடுவது ஒரு வழிமுறையாகும்.

நிதியாண்டு என்பது ஏப்ரல் முதல் மார்ச் வரை உள்ள காலகட்டமாகும். பிப்ரவரியில் தாக்கல் செய்யப்படும் பட்ஜெட் ஏப்ரல் ஒன்றாம் தேதியிலிருந்து தான் அமுலுக்கு வரும். மத்திய அரசு பாராளுமன்றத்தில் வைக்

• பேராசிரியர் நாகநாதன்



கும் பட்ஜெட் நாடு முழுமைக்கும் பொருந்தும். இது தவிர மாநில அரசுகளும் வருடா வருடம் பட்ஜெட் சமர்ப்பித்து வரிகளைப் போட்டு வருவாயைப் பெருக்கிக் கொள்கின்றன. இருந்தாலும் மக்களிடம் அதிக தாக்கத்தை உண்டு பண்ணுவது மத்திய பட்ஜெட்தான். மத்திய அரசிலேயே பொது பட்ஜெட் என்றும் ரயில்வே பட்ஜெட் என்றும் தனித்தனியாகப் போடப்படுகின்றன.

உங்கள் வீட்டில் எப்படி வரவு செலவு கணக்கை மாதா மாதம் போடுகிறார்களோ, கிட்டத்தட்ட அதைப் போன்றதுதான் நாட்டு பட்ஜெட்டும். உங்கள் வீட்டு பட்ஜெட் ஆயிரக் கணக்கில் இருக்கும். நமது நாட்டு பட்ஜெட் கோடி கணக்கில் இருக்கும். அதுதான் வித்தியாசம். உங்கள் அப்பா மாதா மாதம் பத்தாயிரம் ரூபாய் சம்பளப் பணமாக வீட்டுக்கு எடுத்து வருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதில் வீட்டு வாடகை, மளிகை சாமான், பால், சமையல் வாயு, மின் கட்டணம், தொலைபேசிக் கட்டணம், பள்ளி, கல்லூரி கட்டண்ங்கள், ஆகியவற்றுக்கு ஒன்பதாயிரம் செலவானால், மீதம் ஆயிரம் ரூபாயை அவர் சேமிக்க முடியும். சில சமயம் கல்வியாண்டின் துவக்கத்திலேயே நிறைய செலவு செய்ய வேண்டியிருக்கும். இது தவிர குடும்பத்தில் யாருக்கேனும் உடல் நிலை பாதிக்கப்பட்டால் டாக்டர், மருந்து செலவு என்று எதிர்

பாராமல் வந்து நிற்கும். அப்போது அப்பாவின் மாதாந்திர சம்பளப் பணம் போதாது. ஒன்று, அவர் சேமித்து வைத்த பணம் உதவும். அல்லது கடன் வாங்க வேண்டும். இன்றிருக்கும் பொருளாதார சூழலில் சேமிப்பு என்பது கொஞ்சம் அபூர்வமான விஷயம் தான். பெரும்பாலான குடும்பத் தலைவர்கள் கடன் வாங்கியே செலவைச் சமாளிக்கிறார்கள். உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம் போன்ற அமைப்புகளில் கடன் வாங்காத நாடுகளே இப்போது இல்லை.

நமது அரசிற்கு வருவாய் தேடித் தரும் அம்சங்கள் வரிகள், கட்டணங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் லாபம் போன்றவை தான். சுங்க வரி, வருமான வரி, சேவை வரி, உற்பத்தி வரி அல்லது தீர்வை ஆகியவை முக்கியமான வரிகளாகும். அதே போல செலவினங்களைப் பார்த்தால் இரண்டு வகை. உற்பத்தியாக்கச் செலவு, (capital expenditure) உற்பத்தி காரணி இல்லாத (unproductive) செலவுகள். அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம், வாங்கிய கடனுக்கு கொடுக்கப்படும் வட்டி, ராணுவத்திற்கு செலவிடப்படும் தொகை, மானியங்கள் போன்றவை இந்த வகைப் படும். நமது நிதிநிலை செலவினங்களில் 60 சதம் இந்த வகைப்படும். எனவே தான் மானியங்களை ஒழிப்பதில் அரசு ஆவலாக இருக்கிறது.

பற்றாக்குறையை ஈடுகட்ட



• ப. சிதம்பரம்

வரி போடுவது மட்டும் வழி யல்ல. விரயச் செலவுகளைத் தவிர்த்து, சிக்கன நடவடிக்கைகளையும் கையாளலாம். விரயச் செலவு அதிகமாகி வரி வருவாய் பெருகாமல் இருந்தால் பண வீக்கம் வரும். உடலில் ஏதாவது கோளாறு இருந்தால் வீக்கம் அறிகுறி. அது போல நமது நாட்டுப் பொருளாதாரத் துறையில் கோளாறுகள் இருந்தால் அதை வெளிச்சம் போட்டுக் காட்டுவதுதான் பணவீக்கம் (Inflation) . இதன் விளைவு மக்களிடம் வாங்கும் சக்தி குறைந்து பணத்தின் மதிப்பும் வீழ்ந்து விடும். ஒரு நாட்டின் பட்ஜெட்டில் கணிசமான தொகை உற்பத்தி ஆக்கச் செலவுகளுக்கு ஒதுக்கப்பட்டால் அது வளர்ச்சியைக் குறிக்கும் பட்ஜெட் என்று எடுத்துக் கொள்ளலாம்.

**- ப்ரியன்**

படம்: **ராஜன்**

# தத்திச் செல்லும் தவளைகள்!



முதல் பரிசு:

↑ **எஸ். ராகவேந்திரன்,**
பதினோராம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
ஆர்.கே.பேட்டை

**பா. சாய்சங்கர்,**
ஏழாம் வகுப்பு, புனித அன்னாள்
மேல்நிலைப் பள்ளி,
பெருங்களத்தூர் ↓



இரண்டாம் பரிசு:

மூன்றாம் பரிசு:



ச. யோகப்ரியா,
பத்தாம் வகுப்பு,
.ஏ.வி. பெல் பள்ளி,
இராணிப்பேட்டை

ஆறுதல் பரிசு:
சு. ஏமாவதி,
திருநின்றவூர்



ஆறுதல் பரிசு:
எஸ். ரவிகுமார்,
ஆறாம் வகுப்பு, புனித மிக்கல்
மேல்நிலைப் பள்ளி,
செஞ்சி




ஜனவரி இதழில் 'தவளைகள்' என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். பரிசு பெற்ற தவளைகள் இங்கே...


கனகாவும் வனஜாவும் தோழிகள். ஒருநாள்-
தங்கச்சங்கிலி
கதை: ஸ்ரீ.இரா. ரவிவர்மன்
படம்: சேகர்
கனகா, நான் ஒரு கல்யாணத்துக்குப் போறேன். உன் தங்கச் சங்கிலியைக் கொடுக்கறியா?
எப்பப் பார்த்தாலும் ஓசி கேளு. திருடர் பயம் அதிகமா இருக்கு. எப்படி உன்னை நம்பி கொடுக்கறது?
இந்த ஒரு தடவை மட்டும் கொடு. பத்திரமா திருப்பித் தந்துடறேன்.
இதுதான் கடைசித் தடவை. இந்தா பிடி.
அன்று இரவு தூங்கிக் கொண்டிருந்த கனகா பேச்சு சத்தம் கேட்டு விழித்தாள்.
முனியா, வீடு முழுக்கத் தேடியும் ஒரு பொட்டுத் தங்கம் கூட அகப் படலை.
வீடு பெரிசா இருக்குன்னுதான் உன்னைக் கூப்பிட்டேன். சரி, வா வேறு இடத்துக்குப் போகலாம்.
மறுநாள்-
கனகா ரொம்ப நன்றி. இந்தா சங்கிலி.
நான்தான் உனக்கு நன்றி சொல்லணும். நீ மட்டும் சங்கிலி வாங்கிட்டுப் போகலைன்னா இந்நேரம் திருடு போயிருக்கும்.




முதலை - 50 ஆண்டுகள்




ஆமை - 100 முதல் 150 ஆண்டுகள்

# ஆயுட்காலம்




கிளி, அன்னம், வாத்து - 50 ஆண்டுகள்



கார்டர் பாம்பு - 5 முதல் 6 ஆண்டுகள்




மனிதன் - 65 முதல் 75 ஆண்டுகள்





நாய் - பூனை - 12 முதல் 15 ஆண்டுகள்





யானை - 60 முதல் 70 ஆண்டுகள்



எலி - 2 முதல் 3 ஆண்டுகள்


# 10 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடைகள் : 1. டாம் கண் 2. விரல் 3. கால் 4. மூக்கு 5. வால் 6. ஜெரி மீசை 7. காது 8. நாக்கு 9. கால், 10. வேலி

# கட்டத்துக்குள் இருக்கும் பாதி முகம் எந்த முகத்துக்குச் சொந்தம்?



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05"
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 / 03 - 05 " Registered as a Newspaper in Srilanka

